www.tamilarangam.net


# களத்தில்

அன்பளிப்பு 40P

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 19-03-1993


## வவுனியாவில் மின்சார வேலி

வவுனியாவில் சிறீலங்கா இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் நிலப்பரப்பைச் சுற்றி மின்சார வேலி அமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

செக்கலடிப்புலவு, சமயபுரம் ஆகிய இடங்களையும் பேயாடிக்கூழாங்குளம் பகுதியிலிருந்து மூனாமடு பகுதியை உள்ளடக்கியும் மின்சார வேலி அமைப்பதில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

உள்ளே....


- மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி பேட்டி
- எங்கட கிட்டு மாமா - தேவர் அண்ணா
- விடியலைக் காணும் நாள் - கேணல் கிட்டு
- விழுதுகள் - மேஜர் செங்கோல்
- சிறுகதை - நீ அமைதியாக உறங்க..
- இன உணர்வுக் கவிதைகள் - ஓர் ஆய்வு


# "பிரேமா"வின் நோக்கை தெரிவுக்குழு நிறைவேற்றியது

## ✤ தமிழர் தாயகம் துண்டிப்பு
## ✤ ஒற்றையாட்சி நீடிப்பு
## ✤ பெயரளவில் அதிகார மாற்றம்

சிறீலங்கா பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் விரிவான இடைக்கால நகல் அறிக்கை பங்குனி 9ம் திகதி பாராளுமன்றத் தெரிவுக்குழு கூடியபோது, அதன் தலைவர் மங்கள முனசிங்காவால் வெளியிடப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு இரு வெவ்வேறான சபைகளை அமைப்பது; அந்தச் சபைகளுக்கும் சிறீலங்கா அரசுக்குமிடையில் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதில் இந்திய பாணியைப் பின்பற்றுவது; அதாவது எல்லா அதிகாரங்களும் சிறீலங்கா அரசிடம் இருக்கும் சில எழுதப்பட்ட அதிகாரங்கள் மட்டும் நிறுவப்படவுள்ள சபைகளுக்கு இருக்கும். ஆனால் அதேவேளை அதிகாரங்களை ஒற்றையாட்சியின் கீழ் பரவலாக்குவதற்கே இந்தியாவின் 'பட்டியல்' முறையைத் தெரிவுக்குழு சிபாரிசு செய்துள்ளது என்பது முக்கியமான ஒன்று. சமஸ்டி என்பதை தெரிவுக்குழு இந்திய அரசியல் அமைப்பு பாணியில்கூட ஏற்றுக் கொள்ளவில்லை எனத் தெட்டத் தெளிவாகக் கூறியுள்ளது.

இந்த நகல் அறிக்கையில் உள்ள சில யோசனைகள் தெரிவுக்குழுவில் விவாதிக்கப்படாமலே இடம்பெற்றுள்ளதாக தொடங்கிய இழுபறியை அடுத்து நகல் அறிக்கை திருப்பிப் பெறப்பட்டதாம். அறிக்கை வாபஸ் பெறப்பட்டுவிட்டதா எனக் கேட்கப்பட்டவுடன் திரும்பவும் சமர்ப்பிக்கப் பட்டதாம். அறிக்கையை வெளியிடுவதிலேயே இத்தனை சிக்கல். ஆனால் அறிக்கையோ முழுக்க முழுக்க சிங்கள பௌத்த பேரினவாத மேலாதிக்கத்தை மீளவும் நிரூபித்துள்ளது.

சமஸ்டி என்ற கோட்பாடு தமிழ் மக்கள் மத்தியில் ஒரு சலனத்தை ஏற்படுத்தலாம் என்றே முதலில் சிறீனிவாசனின் யோசனை என்ற பெயரில் அதனை உலாவ விட்டது சிறீலங்கா அரசு. இரு சிங்கள பெரும்பான்மைக் கட்சிகளும் தாம் ஏதோ சமஸ்டியை ஏற்பது போல நடித்தன.

அதன் பிறகு வடக்கு - கிழக்கு இணைப்பு இல்லாத சபைகள் என்ற கோசம் எழுப்பப்பட்டது. வடக்கு -கிழக்கு இணைப்பில்லாத சபைகளை எந்த ஒரு காலத்திலும் புலிகள் ஏற்கமாட்டார்கள். எனவே சிறீலங்கா அரசு ஏதோ தரமுயல்வதுபோலவும் அதைப் புலிகள் தடுப்பதுபோலவும் பிரச்சாரத்தை முடுக்கிவிடலாம் என்பதே சிறீலங்காவின் நம்பிக்கை. இதன்

தொடர்ச்சி 14ம் பக்கம் ....



"தாயக விடுதலைக்கு தம்மை அர்ப்பணிக்கும் தெரிவிற்கும், - கல்வி கற்கும் உரிமைக்கும் இடையில் நாம் என்றுமே முரண்பாட்டைக் கற்பிக்க முயலவில்லை. இரண்டுமே எமது சமூகத்தின் வாழ்வியக்கத்திற்கு இன்றியமையாதவை. போரும் கல்வியும் இணைந்த வாழ்வு இன்று எமது வரலாற்றிற்குத் தேவையாகவுள்ளது. எமது போராட்டம் கல்விக்கு கவசமாக இருப்பது போல கல்வியும் எமது போராட்டத்திற்கு காப்பரணாக நிற்கவேண்டும். எமது விடுதலைப் போராட்டத்தின் உன்னதத்தை உணர்ந்து கொள்ளும் வகையில் மாணவ சமுதாயத்திற்கு விழிப்புணர்வை ஊட்டுவது எமது கல்விமான்களின் தேசிய கடமையாகும்." - வே. பிரபாகரன்

### எமது பொருளாதார சுதந்திரத்திற்கு

# தனித்துவமான கல்விமுறை ஏற்படுத்தப்பட வேண்டும்

### - பாராட்டு விழாவில் துணைவேந்தர்

தனித்துவமான எமது பொருளாதார சுதந்திரத்திற்கு, தனித்துவமான ஒரு கல்வி முறை ஏற்படுத்தப்பட வேண்டும். தொழில்நுட்பம் சார்ந்த துறைகள் மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

இப்படிக் கூறினார் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் அ. - துரைராஜா அவர்கள்.

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் நடத்திய தமிழீழ பொதுக்கல்வித் தேர்வில், சிறப்புத்தகைமை பெற்ற மாணவர்களைப் பாராட்டும் நிகழ்ச்சி யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்;

இலங்கையில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பாடசாலைகளில் 40 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் இலவசக் கல்வியைப் பெறுகின்றனர். ஆனால் உயர்கல்வியைப் பொறுத்தவரை நாட்டில் உள்ள 8 பல்கலைக் கழகங்களில் ஏறக்குறைய 9ஆயிரம் மாணவர்களுக்கே ஓராண்டில் அனுமதி கிடைக்கின்றது.

ஒரு வருடத்தில் ஆண்டு ஒன்றில் சேரும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் இரண்டு சதவீதத்தினர் மட்டுமே அதே ஆண்டில் பல்கலைக் கழகத்திற்குச் செல்கின்றனர்.

ஆனால் எல்லா மாணவர்களுக்குமே பல்கலைக்கழகம் செல்லும் நோக்கத்துடனேயே கல்வி போதிக்கப்படுகின்றது. பெற்றோரும் அந்த நோக்கத்தை அடைவதையே விரும்புகின்றார்கள்.

இந்த நிலைமையில் மாற்றம் செய்யப்பட வேண்டியது அவசியம்.

எமது பிரதேசத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கு, மனித வளங்களை அபிவிருத்தி செய்வது அவசியம். அத்தகைய மனித வளங்களின் அபிவிருத்திக்கு கல்வியே அவசியம்.

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## பழைய இரசம் புதிய வார்ப்பில்

"பெரும்பாலான மூன்றாவது உலக நாடுகள், ஐரோப்பிய காலனித்துவ சக்திகளால் உருவாக்கப்பட்ட செயற்கையான அரசுக்கள் ஆகும். அவற்றினுடைய எல்லை நிர்ணயம் பற்றியோ, வரலாற்றுப் பிரிவுகள் பற்றியோ, இனத்துவ வேறுபாடுகள் பற்றியோ, புவியியல் நிலைப்பாடுகள் பற்றியோ போதிய கவனம் எதுவும் செலுத்தப்படாமலே அவை உருவாக்கப்பட்டன. இதனாலேயே காலனித்துவ ஆட்சி அகன்றதன் பின்னர் அவைகளுக்கிடையே பிரிவினை கோரிக்கைகள் காணப்படுகின்றன. இத்தகைய அரசுக்களுள் வாழும் தேசிய இனங்கள் தம்மிடை தேசிய நிர்மாணப் போக்கினை (Nation Building Process) வெளிப்படுத்துகின்றன." என கரோலின் தோமஸ் 'மூன்றாவது உலகநாடுகளும் சர்வதேசத் தொடர்புகளும்' என்ற நூலில் கூறுகின்றார்.

தமிழீழப் பிரச்சினையை சிறுபான்மை - பெரும்பான்மை இனப்பிரச்சினையாக தவறான வடிவைக் காட்ட முற்படுகிறவர்களது முகமூடியை கரோலின் தோமஸின் விளக்கம் கிழித்தெறிகிறது. "காலனித்துவ அல்லது ஒடுக்குமுறை ஆட்சியில் உள்ள மக்கள் அவற்றில் இருந்து தங்களை விடுவிப்பதற்கு சர்வதேச சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட எந்த வழிமுறைகளையும் கையாள உரிமையுள்ளவர்கள்" என மனிதனதும் மக்களதும் உரிமைகளுக்கான ஆபிரிக்க பட்டையம் கூறுகின்றது. "மக்கள் , தமக்கு எதிரேயுள்ளது தம்மை ஒடுக்குபவர்களின் படைதான் என்ற நிலையில், தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்குக் கெரில்லா போர்முறையை கையாள்வர். கெரில்லாப் போர், மக்கள் யுத்தம்" என்கின்றார் நீதி, அநீதியான யுத்தங்கள் பற்றி ஆய்வு செய்த மைக்கல் வால்சர். இவற்றின் பின்னணியில் ஆராய்கையில் தமிழீழ மக்கள், தம்மை ஒடுக்க வந்த சிங்களப் படைகளுக்கெதிராக கெரில்லாப் போர் அமைப்பு முறையைக் கையாண்டு விடுதலைப்புலிகள் என்னும் விடுதலை அமைப்பின் ஊடாக தமது தேச நிர்மாணப் போக்கைத் தொடங்கினர். எனவே தமிழீழ மண்மீட்புப் போர் ஒரு தேச நிர்மாணப் போக்கின் செயல்வடிவம்.

இந்த உண்மையை மூடி மறைத்து, தமிழீழப் பிரச்சினையை ஒரு சிறுபான்மை-பெரும்பான்மை இனப்பிரச்சினையாக காட்டுவதற்கு சிங்களப் பேரினவாதத்தால் உருவாக்கப்பட்ட சொல்தான் 'நியாயமான தீர்வு'. இதனைச் செயற்படுத்தும் ஊடகம் தான் "பாராளுமன்றத் தெரிவுக்குழு". இந்த பாராளுமன்றத் தெரிவுக் குழுவைக் காட்டியே சுமார் இரண்டு வருட காலமாக சர்வதேச சமூகத்திடமிருந்து நிதி உதவிகளை பெற்று தனது இராணுவக் கட்டமைப்பை விஸ்தரித்துக் கொண்டது சிறிலங்கா அரசு. இந்த பெப்ரவரியில் கூட சிறிலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகள் அமைப்பு 16 1/2 கோடி ரூபாவையும், யப்பான் 5,00,000 அமெரிக்க டாலர்களையும், நெதர்லாந்து 2,00,000 குரனோக்களையும் உதவியுள்ளன. அதே வேளை இந்த பெப்ரவரியில் 15.3 மில்லியன் அமெரிக்க டாலர்கள், 4 நவீன புக்காரா விமானங்களாகவும் ரஸ்ய மிக் விமானங்களாகவும் தமிழீழத்தின் மேல் குண்டுமழை பொழியவென உலா வருகின்றன. அரசியல் தீர்வில் தான் நம்பிக்கை நம்பிக்கையென பல்லவி பாடிக் கொண்டே ஒரு இனத்திற்கு இராணுவத்தால் புதைகுழி தோண்ட முற்பட்டு வருகின்றது சிறிலங்கா அரசு. தமது நலன்கள் மேல் மட்டும் அக்கறையுள்ள சர்வதேச நாடுகளும் தெரிந்தும் தெரியாத உருத்திராட்ச பூனைகளாக நிற்கின்றன.

சமீபத்தில் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் "தமிழர் தாயக முழுமை அங்கீகரிக்கப்பட்ட சமஸ்டி அமைப்புமுறை முன்வைக்கப்பட்டால் அதனைப் பரிசீலிக்கலாம்" என பி. பி. சி. யின் 'தமிழோசை' உலக சேவை நிகழ்ச்சிக்கு பேட்டி அளித்தார். அடுத்த சில தினங்களின் பின் பி. பி. சி. யின் 'இது உங்கள் உலகம்' நிகழ்ச்சிக்கு 'தொலைபேசி' மூலம் கலந்து கொண்டு பதிலளித்த சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தனக்கேயுரித்தான நரித்தந்திர பாணியில் "பிரபாகரன், பாராளுமன்றத் தெரிவுக்குழுக்கு அவ் ஆலோசனையை சமர்ப்பிக்கட்டும்" என்றார். அவர் திறந்த வாயை மூட முன்பே, பாராளுமன்றத் தெரிவுக்குழு தனது இடைக்கால நகல் அறிக்கையை வெளியிட்டுள்ளது. தமிழர் தாயகத்தை துண்டாடும் வகையில் "வடக்கு-கிழக்கு இணைப்பு இல்லாத இருசபைகளை அமைத்தல், இன்றைய பிரச்சினைகளுக்கு எந்த அரசியலமைப்பு வடிவம் காரணமாக உள்ளதோ அதே பௌத்த சிங்கள ஒற்றையாட்சியை நீடித்தல், ஒற்றையாட்சிக்குள் இந்திய பாணியிலான அதிகாரப் பரவலாக்கல்" என்ற மயக்குமொழிகளையே கொண்டுள்ளது. இந்தியாவில் மொழிவழித் தேசியம் கூர்மை பெறுவதை தடுப்பதற்காக, மொழிவழி அமைப்புக்களை நிர்வாக நிலையில் அங்கீகரிக்க கூடிய சமஸ்டி அமைப்பு ஒன்று அங்கு உருவாக்கப்பட்டது. ஆயினும் இதன் தோல்வியை இன்று உலகு தெளிவாக இனங்காண்கின்றது. ஆனால் தற்பொழுது பாராளுமன்றத் தெரிவுக்குழு புதுமையான சமஸ்டிமுறை ஒன்றை உலகிற்கு அறிமுகம் செய்கின்றது. ஒற்றையாட்சிக்குள் இந்திய பாணியிலான அதிகாரப் பரவலாக்கல் என்கின்றது. ஒற்றையாட்சியும், சமஸ்டி முறையும் ஒரே சட்டகத்துள் இயங்க முடியாதவை என்பதை உணர்ந்தவர்கள் இந்த ஏமாற்று வித்தையை விளங்கிக் கொள்வர்.

எனவே பிரேமதாசா எந்த நோக்கத்திற்காக பாராளுமன்றத் தெரிவுக்குழுவை அமைத்தாரோ அந்த நோக்கங்களை தெரிவுக்குழு பூரணமாக நிறைவேற்றி சிறிலங்காவில் பௌத்த சிங்கள மேலாண்மையை நிறுவி நிற்கின்றது. இது "1983ல் இருந்து தொடர்ந்து வரும் இன வன்முறையின் கூர்மையினை எடுத்து நோக்கின் சிறிலங்கா அரசாங்கத்திற்கு, பிரச்சினையை அணுகுவதற்கோ தீர்ப்பதற்கோ, எவ்வித விருப்பமோ ஆற்றலோ இல்லை என்ற சந்தேகம் உருவாகிறது" என ஏசியன் சர்வேயில் (ASIAN SURVEY) லியோ றோசும், திலக் சமரநாயகியும் எழுதிய கூற்றை மெய்ப்பித்து நிற்கின்றது.

அத்துடன் பிரிஸ்டல் பல்கலைக்கழக அரசியல்துறை விரிவுரையாளர் வேர்ணன், மார்ஸ்டன் கீவிட் 'தென்னாசியாவின் சர்வதேச அரசியல்' எனும் நூலில் கூறுவதுபோல் "இப்பிரச்சினை சிறிலங்கா என்னும் சட்டகத்துள் தீர்க்கப்படுவதற்கான காலத்தைக் கடந்து விட்டது". தமிழ்த் தேசியம், தன்னை அடிமைப்படுத்தும் சிங்களத் தேசியத்துள் தீர்வைப் பெறலாம் என்பது பகற்கனவு. ஆகவே தமிழ்த் தேசிய இனப்பிரச்சினை சர்வதேச மயப்பட்டு தீர்வை அளாவி நிற்கின்றது. இதுதான் உண்மையான அரசியல் யதார்த்தம்.

சர்வதேச சமூகத்தவர் தமிழீழத்தவரை சுயநிர்ணய உரிமையுள்ள மக்களாக (People with self determination) ஏற்றுக் கொள்வது மூலமே உண்மையான தீர்வுக்கு வழிகாட்ட முடியும். அதுவரை "பழைய இரசத்தை புதிய வார்ப்புகளில் வார்க்கும்" செயலைத்தான் சிறிலங்காவின் பௌத்த சிங்கள பேரினவாத அரசு தொடர்ந்து கொண்டிருக்கும். இதனால் பழைய இரசம் புதிய வார்ப்புகளையும் வெடிப்பித்துக் கொண்டேயிருக்கும். ■

# பூநகரிப் பாதை விவகாரம்; செய்திக்கு புலிகள் மறுப்பு

பூநகரிப் பாதையைத் திறப்பதற்கு விடுதலைப் புலிகள் நேரடியாக மறுத்துள்ளதாக அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயம் கூறியதாக கொழும்பு பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை விடுதலைப் புலிகள் இயக்கம் திட்டவட்டமாக மறுத்துள்ளது.

"இந்தச் செய்திகள் தவறானவை. பூநகரிப் பாதையைத் திறப்பதற்கு விடுதலைப் புலிகள் முற்றாக மறுத்துவிடவில்லை. பூநகரி இராணுவத்தை போக்குவரத்துப் பாதையிலிருந்து தென்புறமாக ஒருமைல் தூரம் வரை விலகி நின்று மக்கள் சுதந்திரமாக பயணம் செய்ய அனுமதிக்குமாறே யோசனை தெரிவித்தோம்" என்று விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அதிகாரபூர்வமான பேச்சாளர் திரு. அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

பூநகரி இராணுவம் வாபசாகாதவரை பூநகரிப் பாதையூடாக பொதுமக்கள் பயணம் செய்வதற்கு விடுதலைப் புலிகள் முற்றாக மறுத்துள்ளதாக கொழும்பிலுள்ள அகதிகளுக்கான ஐ. - நா. உயர் ஸ்தானிகராலய தலைமையதிகாரி கூறியதாக கொழும்பு பத்திரிகைகள் செய்திகள் பிரசுரித்தன. இது தொடர்பாக விடுதலைப் புலிகள்ன் பேச்சாளரிடம் கேட்டபோது,

"பூநகரிப் பாதையைத் திறப்பது பற்றி கொழும்பிலுள்ள ஐ. நா. உயர் ஸ்தானிகராலய அதிகாரி திரு. ரியூட்டருடன் நாம் பேச்சுக்களை நடத்தினோம். பூநகரியிலிருந்து இராணுவத்தை முற்றாக வாபஸ் பெறுமாறு நாம் நிபந்தனை விதிக்கவில்லை. அங்கு தரித்து நிற்கும் இராணுவத்தை பாதையிலிருந்து சிறிது தூரம் விலகி நிற்குமாறு மட்டுமே கேட்டுக் கொண்டோம். இராணுவக் காவல் சாவடிகள் இன்றி மக்கள் சுதந்திரமாகப் போக்குவரத்துச் செய்தற்கு ஒழுங்கு செய்யுமாறும் இந்த யோசனையை அரசு தரப்பிற்கு. தெரிவித்து பதில் கூறுமாறும், நாம் திரு. ரியூட்டரிடம் கேட்டுக் கொண்டோம்" என்று தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், "பூநகரியிலிருந்து இராணுவம் விலகி நிற்க மறுக்கும் பட்சத்தில், கிளாலிக் கடற்பரப்பின் மீதுR அரசாங்கம் விதித்துள்ள தடையை நீக்கி மக்களின் போக்குவரத்திற்கு அனுமதிக்குமாறு புதிய யோசனை ஒன்றைத் தெரிவித்திருந்தோம். இந்த யோசனையை அரசாங்கத்திற்கு தெரிவித்து பதிலை அறிவிப்பதாகவும் திரு. ரியூட்டர் கூறியிருந்தார்" என்றார்.

உண்மை நிலை இப்படியிருக்க, கொழும்பில் ஐ. நா. அதிகாரி தெரிவித்ததாக பத்திரிகையில் வெளிவந்த செய்தி கவலையையும், ஏமாற்றத்தையும் அளித்திருப்பதாக அவர் தெரிவித்தார். ■

## புலிகள் மாற்று யோசனை கூறியது உண்மையே

# ஐ. நா. யாழ் பிரதிநிதி ஊர்ஜிதம்

பூநகரியிலிருந்து இராணுவம் விலகி நிற்க மறுக்கும் பட்சத்தில், கிளாலிக் கடற்பரப்பின் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கி, மக்கள் போக்குவரத்திற்கு அரசாங்கம் அனுமதிக்க வேண்டுமென விடுதலைப் புலிகள் யோசனை தெரிவித்திருந்தனர்.

இவ்வாறு அகதிகளுக்கான ஐ. - நா. உயர் ஸ்தானிகராலய யாழ் வதிவிடப் பிரதிநிதி திரு. அசோக்குமார் கூறினார். யாழ்ப்பாணத்தில் ஐ. நா. அதிகாரி திரு. - ரியூட்டருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களில் பங்குபற்றிய திரு. அசோக்குமார் பூநகரிப் பாதையைத் திறப்பதற்பகு புலிகள் ஒரேயடியாக மறுக்கவில்லை எனக்கூறினார். பூநகரியில் நிலை கொண்டுள்ள இராணுவம் பாதையிலிருந்து ஒரு மைல் தூரம் விலகி நின்று மக்கள் சுதந்திரமாக சோதனையின்றிப் பயணம் செய்ய அனுமதிக்குமாறு புலிகள் கோரிக்கை விடுத்தனர் எனவும் தெரிவித்தார். ■

# 3 நாட்களின் பின் மீட்கப்பட்டனர்

கடற்படையினரின் தாக்குதலையடுத்து யாழ் கடல் நீரேரியில் படகு ஒன்றில் விடப்பட்ட இருவர் மூன்று நாட்களின் பின்னர் மீட்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

கடற்படையினரின் தாக்குதலையடுத்து படகோட்டிகள் நீரில் பாய்ந்து நீந்தித் தப்ப ஒருவர் மட்டும் ஒரு படகில் விடப்பட்டார் என்றும் -கடற்படைத் தாக்குதலுக்கு இலக்கான வேறு ஒரு படகில் இருந்து கடலுக்குள் குதித்த மற்றொருவர் நீந்த முடியாது பின்னர் இந்தப் படகுக்குள் ஏறியதாகவும் கூறப்படுகிறது.

ஆனையிறவுக்கு நெருக்கமாக அலைபட்டுக் கொண்டிருந்த இந்தப் படகிலிருந்து இருவரும் மூன்று நாட்களின் பின்னர் மீட்கப்பட்டனர். ■

# வெயிலில் நிறுத்திவைத்து கயிற்றினால் தாக்கினர்.

## - கடற்படையிடம் அகப்பட்ட மீனவர் தெரிவிப்பு.

இரண்டு மணி நேரமாக சிறிலங்கா கடற்படையினர் எனது கால்களையும், கைகளையும் கட்டிப்போட்டு தமது படகுகளில் வெயிலில் நிறுத்தி வைத்து கம்பாலும், கயிற்றினாலும் மாறி மாறி அடித்துத் துன்புறுத்தினர்.

இவ்வாறு சிறிலங்கா கடற்படையினரிடம் சிக்கி பலத்த காயங்களுடன் விடுவிக்கப்பட்ட கோரியடியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஞானப்பிரகாசம் நவம் (வயது 27) தெரிவித்தார்.

இச் சம்பவம் மணற்காடு கடற்பரப்பில் நடைபெற்றது. அவர் மேலும் தெரிவிக்கும் போது, நானும் மற்றும் இராசா துரைராசா (வயது 18), தேவராசா மோகன் (வயது 22) ஆகியோருமாக மணற்காடு கடல் பகுதியில் தொழில் ஈடுபட்டிருந்த வேளையில் எம்மை நோக்கி வந்த கடற்படையினர் எமது படகை நெருங்கியதும் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இதனால் அச்சமடைந்த நாங்கள் கடலில் குதித்தோம். கடற்படையினரின் படகு எம்மைச் சுற்றியவாறு துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தது. செய்வதறியாத நாங்கள் மீண்டும் எமது படகில் ஏறி கைகளை உயர்த்தியவாறு நின்று பயத்தினால் அலறினோம். அப்போது எம்மை தமது படகுக்கு கிட்ட வருமாறு கடற்படையினர் கையசைத்தனர்.

மூவரும் அவர்களிடம் சென்றதும், முதலில் இராசா துரைராசா என்பவரை படகில் ஏற்றிவிட்டு அருகிலே கடலில் படுக்கவைக்கப்பட்டிருந்த வலையை இழுக்குமாறு எம்மிருவரையும் கடற்படையினர் பணித்தனர். அப்போது இருவரால் இழுக்க முடியாது இன்னும் ஒருவரின் உதவிவேண்டும் என்று நான் கூறினேன். பாசை புரியாத படையினர் என்னை படகில் ஏற்றி கைகளையும், கால்களையும் கட்டி வைத்து மூன்று அதிகாரிகள் தாக்கினர். எனது தலைமயிரைப் பிடித்து தமது படகுடன் மோதியபோது நான் ஒரு கணம் மூர்ச்சையுற்று மயக்க நிலையடைந்தேன்.

முதலில் படகில் ஏற்றியவரை இறக்கி விட்டு வலையை இழுக்குமாறு பணித்தனர். அவர்களாலும் வலையை இழுக்க முடியாது போகவே வலையை கத்தியால் வெட்டிவிடுமாறு கடற்படையினர் தெரிவித்ததிற்கிணங்க மற்றையவர்கள் வலையை வெட்டிவிட்டனர்.

பின்னர் அந்த இரண்டு மீனவர்களையும் படகில் ஏற்றி தேவராசா மோகன் என்பவரை பலமாக தாக்கினர்.

" நாங்கள் கடற்படை முகாமில் எடுத்து வருகின்ற துப்பாக்கி ரவைகள், பீரங்கி குண்டுகள் பயன்படுத்தாமல் அப்படியே முகாமுக்கு எடுத்துச் செல்வோமேயானால் நாங்கள் அதிகாரிகளினால் தண்டிக்கப்படுவோம். ஆகவே இதனை உங்கள் மீது தான் பிரயோகிக்கவேண்டும் " என்று கடற் படையினர் கூறிவிட்டு மீண்டும் சப்பாத்துக் கால்களால் எனது உடம்பின் பல பாகங்களிலும் பலமாகத் தாக்கிவிட்டு கரைக்குப் போகுமாறு பணித்தனர். நாங்கள் கரையை நோக்கி விரைந்து வந்த போதிலும் மீண்டும் எம்மை நோக்கி ஏவப்பட்ட துப்பாக்கி ரவைகள் எமக்கருகே விழுந்தன. நாங்கள் மயிரிழையில் உயிர் பிழைத்தோம் என்றார். ■

**'ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கைக்கும் அர்த்தம் இருக்கிறது. ஆனால் எம்முடைய வாழ்க்கையின் அர்த்தத்தை நாம்தான் தேடிக்கொள்ள வேண்டும்'**

**- கிட்டு -**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கைதடி வெடிவிபத்தில் வீரச்சாவடைந்த 10 வேங்கைகளுக்கு நினைவுக்கல் திறப்பு

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் கடந்த 1987ஆம் ஆண்டு நாவற்குழியில் இருந்த சிறீலங்கா இராணுவ முகாமை தாக்கி அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த சமயம் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட பத்துப் போராளிகளினதும் பொதுமக்களினதும் நினைவாக மாபெரும் அஞ்சலிக் கூட்டம் ஒன்று கைதடியில் நடைபெற்றது.

கைதடி வடக்கு பிள்ளையார் கோவிலுக்கு சமீபமாக உள்ள மைதானத்தில் வீரச்சாவடைந்த போராளிகளினதும் பொதுமக்களினதும் நினைவாக நினைவுக்கல் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது. அத்துடன் போராளிகளினது உருவப் படங்களும் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டன.

ஈகைச் சுடர் ஏற்றும் நிகழ்ச்சியுடன் ஆரம்பித்த இவ்வைபவத்தில் விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. சங்கர் அண்ணா நினைவுக்கல்லைத் திறந்து வைத்தார். இதற்குத் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் மலர் மாலை அணிவித்தார். மாவீரர்களது உருவப்படங்களை விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. யோகி திறந்துவைத்தார். இப்படங்களுக்கு இம்மாவீரர்களது உறவினர்கள் மலர்மாலை அணிவித்தனர். இதனைத் தொடர்ந்து நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

"எமது போராட்ட வரலாற்றில் நாம் பெரும் இழப்புக்களைச் சந்தித்துள்ளோம். இவ்வாறான இழப்புக்களுக்கு மத்தியிலேயே எமது போராட்டத்தை நாம் நகர்த்துகின்றோம். இவ்வாறான இழப்புக்களே எமது போராட்டத்திற்கு உறுதியையும் உத்வேகத்தையும் கொடுத்தது. இதுவே எமது போராட்டத்தை உயர்த்தியது." இவ்வாறு இக்கூட்டத்தில் உரை நிகழ்த்திய விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. யோகி தெரிவித்தார்.

கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன் உரையாற்றிய போது "இன்று எமது போராட்டத்தில் படைக்கப்படும் வரலாறுகள் பல நூறு ஆண்டுகளுக்குப் பின்னரும் எமது போராட்டத்தின் தன்மைகளை உலகிற்கு உணர்த்தும்" என்றார்.

மேலும் இக்கூட்டத்தில் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம், சாவகச்சேரி வட்டப் பொறுப்பாளர் திரு. தமிழன் ஆகியோரும் நினைவுரை நிகழ்த்தினர். இவ் அஞ்சலிக் கூட்டத்தில் நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். பல கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி ஜெயா பேசும்போது "எமது போராட்டத்தின் மூலம் இந்த மண்ணும் மக்களும் பூரண சுதந்திரம் பெற்று விடுதலையடைவார்கள் என்பதனாலேயே எமது போராளிகள் சாவை விருப்புடன் சந்திக்கத்தயாராக உள்ளனர். பூரண சுதந்திரமும் விடுதலையும் பெறும்வரை எமக்கு அடுத்து வரும் சந்ததி இப்போராட்டத்தை தொடர்ந்து நடாத்தும் என்ற கனவுடனேயே போராளிகள் வீரச்சாவடைகின்றனர். நாம் அவர்களது கனவை நனவாக்குவதே அவர்களுக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்" என்று கூறினார். ■

## கிளாலியில் இராணுவத்தினர் படகுமூலம் தரையிறங்க முயற்சி

### புலிகள் அடித்து விரட்டினர்

கிளாலிக் கடற்பரப்பூடாக அதிகாலை 4. 30 மணியளவில் கறுக்காய் தீவுப் பக்கமாக படகுகளில் வந்து தரையிறங்க முற்பட்ட பெருமளவு இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் தரையிறங்க விடாது தொடர்ச்சியாக தாக்குதலை நடாத்தி துரத்தியடித்துள்ளனர்.

இதுபற்றி மேலும் கிடைத்த செய்திகளின்படி தெரிய வருவதாவது:-

அதிகாலை சுமார் 4. 30 மணியளவில் நான்கு பாரிய விசைப்படகுகளில் திடீரென வந்த நூற்றுக்கணக்கான சிறீலங்காப் படையினர் கறுக்காய்த் தீவுப் பக்கம் தரையிறங்க முற்பட்டனர். படையினரின் இந்த முயற்சிக்கு எதிராக விடுதலைப் புலிகள் கரையோரப் பகுதியிலிருந்து பெரும் தாக்குதலை தொடர்ச்சியாக நடத்தியதால் படையினர் முற்றாக நிலைகுலைந்தனர். இதையடுத்து ஏற்பட்ட பாரிய இழப்புக்களுடன் ஆனையிறவு, பூநகரி மகாம் நோக்கி இந்த விசைப்படகுகள் படையினருடன் ஒருவாறு தப்பிச் சென்றன.

விடுதலைப் புலிகளின் மோட்டார், ரொக்கட் தாக்குதலினால் படையினர் தப்பிச் சென்ற பீரங்கிப் படகு தீப்பிடித்தவாறு புகை கக்கிச் சென்றதாகத் தெரிவிக்கப் படுகிறது. ■

## எமது பிள்ளைகளை நாமே களத்திற்கு அனுப்ப வேண்டும்

### ■ துணைப்படைவீரர் பேச்சு

எமது பிள்ளைகளை நாமே ரத்தத் திலகம் இட்டு களத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த துணைப்படைவீரர் ஒருவர் தெரிவித்தார்.

துணைப்படை வீரர்கள் கௌரவிக்கப்பட்டு அவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கும் வைபவம் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்ட அவர் மேலும் கூறுகையில் முன்னைய காலங்களில் நாம் சிங்களவர்களிடம் அடி வாங்கி ஓடினோம். ஆனால் இனியும் அவ்வாறு அஞ்சி ஓடக் கூடாது எனவும் தெரிவித்தார். அத்துடன் சாவு அனைவருக்கும் வருவதுதான். ஆனால் அதை நாம் அர்த்தமுடையதாக்கிக் கொள்ள வேண்டும். எதிரியின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை நீளவிடாது தடுக்க வேண்டும். சண்டைகள் நடைபெறும் இடங்களுக்கு வீரர்கள் சென்று விடுவதால் எமது கிராமங்களை நாமே காக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட சிறப்புத் தளபதி அன்பு மங்கள விளக்கேற்றி விழாவினை ஆரம்பித்து வைத்தார். இவ்விழாவில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பெரும் தொகையான துணைப்படை வீரர்கள் கலந்து கொண்டனர். இதில் நெடுங்கேணி, உடும்புக்குளம், வட்டுவாகல். செம்மலை, அலம்பில், குமுழமுனை, கொக்குத்தொடுவாய் பிரதேசங்களைக் காக்கும் துணைப்படை வீரர்களும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

முல்லைத்தீவு மாவட்ட சிறப்புத் தளபதி அன்பு துணைப்படை வீரர்களோடு கலந்துரையாடினார். இதன்போது 1990 ல் நாம் சொன்னதை மூன்று ஆண்டுகளின் பின் உணர்ந்து இன்று பெரும்படையணியாக ஒன்றுபட்டுள்ளீர்கள். தேசிய விடுதலையின் வெற்றிக்கான ஆரம்பமே இது. பிறந்த மண்ணையும் உங்கள் குடும்பத்தையும் எதிரியிடமிருந்து பாதுகாக்க இன்று நாம் உங்களுக்கு வழங்கும் இந்த ஆயுதங்கள் பயன்படும். நீங்கள் அனைவரும் பிரதேச வேறுபாட்டை மறந்து பலம்மிக்க அணியாய் இணைந்து செயற்பட வேண்டும். வலுவான எமது படைக்கு துணையான படை தேவை. இத்துணைப்படையில் சேர வேண்டியவர்களும் இருக்கின்றார்கள். அவர்கள் வலுவான படையில் இணைந்து கொள்ள முன்வர வேண்டும். சொந்த மண்ணை விட்டு ஓடி ஓடி புதிய எல்லைகளை நாம் வகுக்கக்கூடாது என்றார்.

இவ்விழாவின் போது முல்லைத்தீவு மாவட்ட சிறப்புத்தளபதி அன்பு துணைப்படை வீரர்களுக்கு தானியங்கித் துப்பாக்கிகளை வழங்கினார். ■

## மாணவ மாணவிகளுக்கு அப்பியாசப்புத்தகங்கள் சீருடை

யாழ். மறைமாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையத்தால் இடம் பெயர்ந்துள்ள மாணவர்களுக்கு 23220 அப்பியாசப் புத்தகங்கள் 1697 மாணவர் சீருடைகள் 2199 மாணவிகள் சீருடைகள் என்பன வழங்கப்பட்டன.

நவாலி, பாசையூர், சுண்டிக்குளி, சுன்னாகம், உரும்பிராய். பெரியகோவிலடி, மானிப்பாய், முகமாலை, சாவகச்சேரி, அரியாலை, கரவெட்டி, பருத்தித்துறை, மிருசுவில், அடைக்கலமாதாகோவிலடி, குருநகர், சில்லாலை, சுழிபுரம் ஆகிய இடங்களில் இடம்பெயர்ந்துள்ள மாணவர்களுக்கு இவ்வுதவி பங்குத்தந்தைகளூடாக வழங்கப்பட்டதாக மனித முன்னேற்ற நடுநிலைய பொறுப்பதிகாரி ஞா. அருளானந்தம் கூறினார். அருட்திரு. பயஸ் அவர்களினால் மிகக் கஸ்டங்களுக்கு மத்தியில் இவை குடாநாட்டுக்குள் எடுத்து வரப்பட்டன எனவும், அருட்செல்வி காஸ்மீர் துணிகளை வெட்டி சீருடைகள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டதாகவும் கூறப்பட்டது. ■




விடுதலைப் புலிகளின் சர்வதேசச் செயலகத்தால் "கிட்டு எங்கள் வரலாற்று நாயகன்" எனும் நூல் ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது. இந்நூலின் முன் அட்டையை விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கிட்டு லண்டனில் அவர் வசித்த வீட்டு வாசலின் முன் நின்றுகொண்டு இருக்கும் படம் அலங்கரிக்கிறது. அவரின் நினைவுத் துளிகள் நூலின் உள்ளே சிந்தப்பட்டுள்ளன. நூலின் உள்ளே கட்டுரைகள், கவிதைகள், கிட்டண்ணாவின் ஒவியங்கள், அவரது நிழல்படங்கள் என்பன நெஞ்சை நெருடுகின்றன. அவரின் நினைவுகளோடு நூலினுள் நுளைகின்ற இதயங்கள் கனத்து நிற்பதே இந்நூலின் கனதியாக இருக்கின்றது.

## புனாலையில் சிறிலங்கா இராணுவத்தினர் கிளர்ச்சி

சிறிலங்கா இராணுவத்தின் வடக்கு-கிழக்கிற்கான தளபதி கொப்பேக்கடுவாவும், ஏனைய வடக்குக்கான இராணுவ கடற்படைத் தலைமைகளும், விடுதலைப்புலிகளால் அராலித்துறையில் அழிக்கப்பட்டதினால் ஆத்திரம் அடைந்த இராணுவத்தினர், ஆகஸ்ட் 8 ம் திகதி 1992 ம் திகதியன்று, மைலந்தனை தமிழ்க் கிராமத்துள் புகுந்து இனப்படுகொலைகள் செய்தனர்.

இவ் மைலந்தனை படுகொலைகளுக்கு சிறிலங்கா இராணுவம் தான் பொறுப்பு என்பது சாட்சிகளுடன் நிருபணமாகியது.

இதனால் இவ் இனப்படுகொலையை உலகின் கண்களில் இருந்து மறைப்பபதற்காக, புனாணை இராணுவ முகாமைச் சேர்ந்த 20 இராணுவத்தினர் விசாரணை என்ற பெயரில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இராணுவ முகாமை விட்டு வெளியே செல்ல அனுமதிக்கப் படவில்லையே ஒழிய மற்றப்படி இந்த இருபது பேருக்கும் மற்றைய இராணுவத்தினருக்கும் எதுவித வேறுபாடும் காட்டப்படவில்லை. ஆயினும் இதுகூட மற்றைய இராணுவத்தினருக்கு பிடிக்கவில்லை. ஐந்து மாதகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமது சக இராணுவத்தினரை உடனடியாக விசாரணை ஏதுமின்றி வெளியே விட வேண்டுமென்று புனாணை இராணுவ முகாம் இராணுவத்தினர் உட்கிளர்ச்சி செய்து வருகின்றனராம். ■

## 1991 - 1992 ஆம் ஆண்டுகளுக்கான பெரும்போக நெற்செய்கை; 665 கெக்டர்கள் பாதிப்பு!

யாழ். குடாநாட்டில் கடந்த 1991 -1992 ஆம் ஆண்டுகளுக்கான பெரும்போக நெற்செய்கை பத்தாயிரத்து 323 கெக்டரில் செய்கை பண்ணப்பட்டபோதும் 665 கெக்டர் நெற்செய்கை அறுவடை செய்ய முடியாமல் பாதிப்புக்குள்ளானது.

இதேவேளை இவ்வருடத்திற்கான (1992 -1993) பெரும்போக நெற்செய்கை ஒன்பதினாயிரத்து 983 கெக்டர் நிலப்பரப்பிலேயே செய்கை பண்ணப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக தீவகம், மாதகல், இளவாலை, சேந்தான்குளம், அம்பனை போன்ற பகுதிகளில் விவசாய முயற்சிகளில் ஈடுபட முடியாமல் இருப்பதே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் சில வயல்களில் நெல்லிற்கு மேலாக புல்லு வளர்ந்திருக்கின்றது. இதனை அழிப்பதற்கான மருந்து வகை இங்கு இருந்தும் அதனை சரிவரப் பயன்படுத்தாமல் விட்டதே இதற்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் திரு. கே. குணரட்ணம் இத்தகவல்களைத் தெரிவித்தார். ■

●

சென்ற இதழில் இடம் பெறத் தவறிய புதுவை இரத்தினதுரையின் கவிதாஞ்சலி, விசேட தளபதி கருணாவின் தென்தமிழீழ நிலை, அன்னை பூபதி 5வது ஆண்டு நினைவுக் கவிதை என்பன இவ்விதழில் இடம் பெறுகின்றன.

■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புலிகள் யூ.என்.எச்.சீ.ஆர். பேச்சு வார்த்தை

## * உணவு மருந்துப் பொருட்களை கடலேரியூடாக கொண்டுவர இணக்கம்

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடத்திற்கும் ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஆணையாளர் அதிகாரி நிக்கலஸ்க்கும் இடை நடைபெற்ற பேச்சு வார்த்தை சுமுகமான முறையில் நடைபெற்றது. உணவு மருந்துப் பொருட்களை கடலேரியூடாக இவர்களின் பாதுகாப்புடன் கொண்டு வருவதற்கு இணக்கம் காணப்பட்டது. இவ்விணக்கத்தை சிறிலங்கா அரசிடமும் இராணுவ அதிகாரிகளிடமும் எடுத்துக் கூறிய பின்னரே இது எவ்வளவு தூரத்துக்கு வெற்றியளிக்கும் எனக் கூறமுடியுமென திரு. நிக்கலஸ் தெரிவித்துள்ளார்.

இதற்கிடை கடற்புலிகளின் விசேட படைப்பிரிவு, நவீன ஆயுதங்கள் பொருத்தப்பட்ட ரோந்துப் படகுகளில், இருகரையிலும் பாதுகாப்பு வழங்க, நூற்றுக்கணக்கான படகுகள் கிளாலிக் கடலேரியில் சேவையில் ஈடுபட்டதாக தகவல் கிடைத்துள்ளது. இப்படகுகளில் அத்தியாவசிய உணவுப் பொருட்களும் கிளிநொச்சிப் பகுதியிலிருந்து வடக்கே எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் குடாநாட்டிற்குள்ளும் குடாநாட்டிற்கு வெளியேயும், இப்படகுகளில் பயணம் செய்துள்ளனர். படகுச்சேவை ஆரம்பிக்கப்பட்ட சில மணி நேரத்தில் ஆனையிறவில் இருந்து எறிகணைத் தாக்குதல்கள் கடலேரியின் நடுப்பகுதி நோக்கி மேற்கொள்ளப்பட்ட போதிலும் படகுகள் எதுவித சேதமுமின்றி கரைசேர்ந்தன. சுமார் இரண்டு மணி நேரமாக இத்தாக்குதல்கள் இடம் பெற்றதாக தெரிகின்றது.

### "தபால்தடை"

இதற்கிடை, கடந்த 4 மாதங்களாக வடக்குக்கான தபால்களை கப்பலில் அனுப்பாது தடுத்து வைத்திருப்பதன் மூலம் மக்கள் தொடர்புக்கும் சிறிலங்கா அரசு தடையிட்டு வருகின்றது. வெளிநாட்டிலிருந்து அனுப்பப்பட்ட கடிதங்கள் உடைத்து வாசிக்கப்படுவதும் உள்ளே உள்ளவை திருடப்படுவதும் சாதாரண விடயமாகியுள்ளது. இது தனிமனித உரிமைகளில் அரசு தலையிடும் செயலாகும் வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்பட்ட மருந்துகள் வடக்குக்கு அனுப்பப்படாமல் திரும்பவும் அனுப்பியவர்களுக்கே திருப்பி அனுப்பி வைக்கப்படுகின்றது. ■

# தமிழீழத்தின் சுபீட்சத்திற்கு கல்வி அறிவு அவசியம்

## ■ பாராட்டு வைபவத்தில் இளங்குமரன்

விடுதலைப் போராட்டம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ, கல்வியும் அதேயளவு முக்கியத்துவம் வாய்ந்தது. தமிழீழத்தின் சுபீட்சத்திற்கும், வளத்திற்கும் இன்றியமையாதது கல்வி அறிவு. கல்வி, சமுதாயத் தேவைகளின் மையமாக விளங்குவதால் எமது மாணவர்கள் அதில் மேல் நிலையை அடைய வேண்டும்.

விடுதலைப் புலிகளின் பிரமுகரும் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவைப் பொறுப்பாளருமான திரு. வே. இளங்குமரன் இவ்வாறு சொன்னார்.

க. பொ. த. உயர்தரப் பரீட்சை 4 ஏ பெற்ற யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மாணவன் செல்வன் ஞா. யூட். - கிறேசியன், மற்றும் புலமைப்பரிசில் பரீட்சையில் 191 புள்ளிகளைப் பெற்ற நல்லூர் ஆனந்த வித்தியாலய மாணவி செல்வி. - கே. நிசாந்தி ஆகியோரைப் பாராட்டும் வைபவம் ஒன்று அண்மையில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலத்தில் அதிபர் திரு. மு. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

அந்த வைபவத்தில் திரு. இளங்குமரன் பேசுகையில் -

இந்த மாணவர்கள் பரீட்சையில் நல்ல பெறுபேறடைய காரணமாக அமைந்த ஆசிரியர்களின் சேவை போற்றத்தக்கது. எதிர்காலத்திலும் இது போன்ற நிகழ்வுகள் இடம்பெற வேண்டும் - என்றார்.

கல்லூரி அதிபர் திரு. இராமலிங்கம் பேசும்போது -வசதியீனங்களின் மத்தியிலும் கூட எமது பிரதேசத்திற்கு நாம் ஆற்றவேண்டிய மகத்தான பணியைச் செய்து வருவதற்கு ஆசிரியர்களின் தளராத சேவைகளும், மாணவர்களின் எதிர்காலம் குறித்த நியாயமான சிந்தனைகளுமே காரணமாகும். கிராம, நகர பாடசாலைகளுக்கு இடைப்பட்ட இக்கல்லூரிகளின் வரலாறு பெருமைக்குரியது என்றார். ■

# போர்முனையில் புக்காரா விமானங்கள்

அண்மையில் சிறீலங்காவால் வாங்கப்பட்ட புக்காரா விமானங்கள் தமிழ்ப்பகுதிகளின் மேல் குண்டு வீசத் தொடங்கியுள்ளன.

புக்காரா விமானம் - இது ஆர்ஜன்ரீனாவில் தயார் செய்யப்படும் தாக்குதல்களுக்கான இலகு விமானம். தரைப்படையினருக்கு அருகே இருந்து துணையாக நிற்கக் கூடிய தன்மையும், வேவு பார்க்கக் கூடிய ஆற்றலும், திடீர்த் தாக்குதல்களை எதிர்க்கக்கூடிய ஆற்றலும் கொண்டது.

இதுவரை மூன்று புக்காரா விமானங்கள் சிறீலங்காவுக்கு வந்துசேர்ந்துள்ளன. இவற்றில் இரண்டு ஏற்கனவே தமிழர் பகுதிகள் மீது தாக்குதல் நடத்தப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

நான்காவது புக்காரா விமானம் விரைவில் சிறீலங்கா விமானப் படையை வந்துசேரவுள்ளது,

மொத்தமாக பதினொரு மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு இந்த நான்கு விமானங்களும் வாங்கப்பட்டுள்ளன.

82 ஆம் ஆண்டில் பிரிட்டனுடன் போக்லாந்துப் போரில் ஆர்ஜன்ரீனா இந்த விமானங்களை பெரிதும் பாவித்தது. இந்த புக்காரா விமானங்கள் தவிர, சீனாவில் தயாரிக்கப்பட்ட F-5, F-7 விமானங்களும் இத்தாலியில் தயாரிக்கப்பட்ட SF-260 - நிலையான இறக்கைகள் கொண்ட விமானங்களும் தமிழர் பகுதிகள் மேல் குண்டுகளை வீசப்பயன்படுத்தப்படுகின்றன.

ரஸ்ய தயாரிப்பான Mi-8 உலங்குவானூர்திகள் (இராணுவப் பயன்பாட்டிற்கென வடிவமைக்கப்பட்டவை) மூன்றும் இந்த வாரத்திற்குள் சிறீலங்காவை வந்தடையவுள்ளன. இவை 4. 3 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு வாங்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. ■

## நீ அமைதியாக ....

அருகாக இருந்தான்; குனிந்து முத்தமிட்டான்; எழுந்து நடந்தான். காற்று வீசியது. அரசமரம் சத்தமாகச் சலசசலத்தது. மற்றைய மரங்கள் ஆடின.

கம்பிகளால் ஏறி உள்ளே இறங்கினான் இனிய வாசல். காற்றின் தடவலில் குளிர்மை.

மெதுவாக ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்தான். அண்ணனுக்கு அருகில் போய் நின்றான்.

நிலவு. மரங்களின் சிலிர்ப்பு. அமைதி.

"அண்ணா, ஏன் இங்க வந்து படுத்தனி"?

அரசமரம் சத்தமாகச் சிலிர்த்தது. அருகில் நின்ற வேம்பு ஆடியது. மற்றைய மரங்களும் அப்படியே.... இலைகள் உதிர்ந்து விழுந்தன.

"உனக்காக.... நீ சிரிக்க.... வளர..... சுதந்திரமா ஓடி ஆட... அமைதியா உறங்க...."

அண்ணனின் குரல்தான். இல்லை... அரசமரம். எதுவோ... அவனுக்கு விடை தேவைபோல இல்லை.

"நீ சிரிக்க..... வளர.... சுதந்திரமா ஓடி ஆட.... அமைதியாக உறங்க....."

காற்றில் குரல். அண்ணன் தான். இல்லை.... அரசமரம்... இல்லை... எல்லா அண்ணாக்களும்.....! ■

## ஏழு மாதங்களில்...

முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்தக் காலப்பகுதியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட சிறுவரின் எண்ணிக்கை 3460 ஆகும். இவர்களில் 118 பேர் மரணமாகியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இறந்தோரின் எண்ணிக்கை 316 ஆகும். இங்கு 2760 பேர் வைத்திய சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

மன்னார், வவுனியா மாவட்டத்தில் முறையே 89, 76 பேர் இறந்துள்ளனர்.

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலும் இந்த நோய் காரணமாக பலர் இறந்துள்ளனர். ஆனால் அந்த விபரங்கள் இதில் சேர்க்கப்படவில்லை. ■

### ஜேர்மனியில்

# கேணல் கிட்டுவுக்கு வீர அஞ்சலி

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரும், சர்வதேசப் பொறுப்பாளருமான கேணல் கிட்டு அவர்கட்கும், அவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஒன்பது தோழர்களுக்கும் ஜெர்மனியில் கடந்த சனிக்கிழமை 13ம் திகதி ஒபகௌசன் நகரில் வீர அஞ்சலி கூட்டமொன்று நடாத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளின் ஜேர்மன் கிளையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் ஆயிரக்கணக்கானோர் நீண்ட வரிசையில் நின்று கேணல் கிட்டுவுக்கும் ஏனைய போராளிகளுக்கும் மலரஞ்சலி செலுத்தினர்.

கிளையின் பொறுப்பாளர் தனது உரையில், "கேணல் கிட்டு அவர்கள் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்தோம் என்பது பெருமைப்பட வேண்டிய விடயம். எமது இனத்திற்காக தம் வாழ்வை அர்ப்பணித்த அவரது வழியில் அயாராது உழைத்து இலட்சியத்தை வென்றெடுப்பதே அவருக்கு நாம் செய்யும் உண்மையான அஞ்சலியாகும்" என்றார்.

இவ் அஞ்சலி நிகழ்ச்சியில் இம் மாவீரர்களின் வீரத்தையும் புகழையும் வெளிப்படுத்தும் உரைகளும், கவிதாஞ்சலிகளும், நடனாஞ்சலிகளும் அங்கிருந்தவர்களின் மனதை உருக்கும் வகையில் இடம்பெற்றன.

இந்த வைபவத்தில், கேணல் கிட்டு அவர்கள் வரைந்த ஓவியங்கள், அவருடைய எண்ணச் சிதறல்கள், அவர் அளித்த பேட்டிகள், அவர் பற்றிய ஆய்வுகள் அடங்கிய "கிட்டு எங்கள் வரலாற்று நாயகன்" என்ற புத்தக வெளியீடும் நடைபெற்றது. ■

### மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம்

# சர்வதேச அமைப்புக்கள் முறையீடு

சிறீலங்காவில் மனித உரிமைகள் மீறப்படுவது பற்றி ஐ. நா. - மன்றத்தின் மனித உரிமைகளுக்கான ஆணைக்குழுவிடம் பல சர்வதேச அமைப்புக்கள் முறையீடு செய்துள்ளன.

உலகின் பல பாகங்களிலும் இருந்து தொழிற்படும் இருபத்தைந்து அரச சார்பற்ற அமைப்புக்கள் இந்த ஆணைக்குழுவின் 49 வது அமர்விலே கூட்டறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளன.

வாசிங்டன் நகரில் இருந்து, சர்வதேச கல்வி மேம்பாட்டு நிறுவனமும் இந்த ஆணைக்குழுவிடம் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நடைபெறும் இனப்பிரச்சனையைத் தீர்க்க சிறீலங்கா அரசு இராணுவ நடவடிக்கையினையே கையாளுகின்றது எனவும், வேறு எந்த வழிமுறைகளையும் அது பயன்படுத்தாது இருக்கின்றது எனவும், இருபத்தைந்து அரச சார்பற்ற அமைப்புக்கள் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சிறீலங்காவில் நிகழும் மனித உரிமை மீறல்கள், மனிதாயச் சட்ட மீறல்கள் என்பன பற்றி மிகவும் கடுமையான நடவடிக்கையை எடுக்குமாறும், அவை மனித உரிமைகள் ஆணைக்குழுவைக் கேட்டுள்ளன. சிறீலங்கா விடயத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வேண்டும் என்றும் அந்த தீர்மானம் எவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளன.

*. போர்நிறுத்தம் ஒன்றை உடனே கொண்டு வந்து சுயநிர்ணய உரிமை, மனித உரிமைகள் என்பவற்றின் அடிப்படையில் தமிழர் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகளை நடாத்த வேண்டும் என்று அந்த தீர்மானம் கேட்கவேண்டும்.

*. அத்துடன் சிறீலங்காவில் போர்க்கால மனிதாயச் சட்டங்கள் பேணப்பட வேண்டும் என்று அது வலியுறுத்த வேண்டும்.

*. அதுமட்டுமன்றி சிறீலங்காவில் நடைபெறும் மனித உரிமை மீறல்களைக் கருத்திற் கொண்டு அதற்கு முன்னுரிமை அளித்து - மனித உரிமைகள் ஆணைக்குழு -அங்கு நிகழும் நிலைமைகளைக் கண்காணிக்க வேண்டும் எனவும் அந்த அமைப்புக்கள் கேட்டுள்ளன.

சர்வதேச கல்வி மேம்பாட்டு நிறுவனம் (INTERNATIONAL EDUCATION DEVELOPMENT INC -IED) தனியே வெளியிட்ட அறிக்கையில்;

சிறீலங்காவில் பலவிதமான மனிதாயச் சட்ட மீறல் நடவடிக்கைகளையும், மனித உரிமை மீறல்களும் நடைபெற்று வருவதால் அதற்கென்று அங்கே தனியாக ஒரு சிறப்பு கண்காணிப்பு விசாரணையாளரை நியமிக்க வேண்டும் என்று கேட்டுள்ளது.

சிறீலங்காவில் மட்டுமன்றி இந்தியாவிலும் ஈழத்தமிழர்களுக்கு எதிராக இடம்பெறும் நடவடிக்கைகளையும் இந்த அமைப்பின் அறிக்கை கண்டித்துள்ளது.

கிட்டுவும் ஏனைய போராளிகளும் சென்ற கப்பலை சர்வதேச நீர்ப்பரப்பில் வைத்து இந்திய அரசு இடைமறித்த செயலையும் இந்த அமைப்பு கண்டித்துள்ளது.

இந்தியாவில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட ஒன்பது பேரும் சித்திரவதைக்குள்ளாகியுள்ளனர் என்று அவர்களைப் பரிசோதித்த வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். இந்தியாவின் கடற்கொள்ளை நடவடிக்கையை மனித உரிமைகள் ஆணைக்குழு கண்டிக்க வேண்டும் என்றும் அங்கு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் இந்த அமைப்பு கேட்டுள்ளது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குட்டிசிறி

வானத்தில் வட்டமிட்டுக் கொண்டிருக்கும் குண்டு வீச்சு விமானம் 'இரையைக் கண்ட கரிக்குருவி' மாதிரி குத்தெனச் சரிந்து பாய்கையில், விமான எதிர்ப்புத் துப்பாக்கியை சட்டென உயர்த்தி விமானத்தின் போக்குக்கு ஏற்ப ரவைகளைத் தீர்ப்பதற்கு, ஒரு தனித்திறமை வேண்டும். குட்டிசிறிக்கு இது நிறையவே பிடிக்கும். பெரும்பாலான சண்டைகளில் ஐம்பது கலிபர் துப்பாக்கிக்கு அருகில்தான் அவன் நின்றிருக்கிறான்.

சின்னவயதிற்கே உரிய போட்டா போட்டியுடன் வானூர்திகளுடன் இவன் சண்டையிடுவான். பதிந்து சரியான இலக்கைத் தாக்குவதற்கு வானூர்திகளை இவன் விடுவதேயில்லை. சண்டையின் முடிவில் வானூர்திகளின் இலக்கு, விமான எதிர்ப்புத்துப்பாக்கியுடன் அலையும் இவர்களது பிக்கப் வண்டிகளாகத் தான் இருக்கும்.

குட்டிசிறி ஆபத்துக்களுக்கு ஒருபோதும் அஞ்சுவதில்லை. விமானங்களுடனான அவனது சண்டைகளும் ஓய்வதில்லை.

அந்த உற்சாகம் நிறைந்த இளைஞனின் போராட்ட வாழ்க்கையே வேறானதுதான். உலகம் வியக்கத்தக்கது.

அவன் இயக்கத்திற்கு வரும்பொழுது சின்னவனாக இருந்தான், மெல்லியவனாக இருந்தான். ஏற்கனவே அங்கு சிறி என்றொரு தோழன் இருந்தபடியால், அவனது தோற்றத்திற்கு ஏற்றமாதிரி குட்டிசிறி என்ற பெயர் நிலைத்துவிட்டது.

புலிகளின் முகாம் ஒன்றில் தற்காலிக பயிற்சியுடன், குட்டிசிறியின் போராட்ட வாழ்க்கை ஆரம்பமானது. முதலில் தோட்டா கட்டும் வேலைதான் அவனுக்குத் தரப்பட்டது. பாவிக்கப்பட்ட ரவைகளின் வெற்றுறைகளை எடுத்து, மருந்து நிரப்பி புதிதாக உருவாக்கும் வேலை.

வெடிமருந்துடன் பரிட்சயமான அந்த முதலாவது நாளின் பின்பு அவனது சிந்தனை முழுவதும் வெடிமருந்தியக்கம் தொடர்பானதாகவே இருந்தது.

புலிகளின் முதலாவது கண்டுபிடிப்பான ஆறு அங்குல மோட்டார் தயாரிக்கப்பட்டபோது, அதில் அவனது பங்களிப்பு பெருமளவில் இருந்தது. யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் உள்ள கல்லுண்டாய் வெளியில் அந்த எறிகணை செலுத்தி முதலாவது எறிகணையை வெற்றிகரமாக ஏவியபொழுது, குட்டிசிறி மகிழ்ச்சியில் தத்தளித்தான்.

புலிகளின் வரலாற்றில் இன்று நவீன தொழில்நுட்பங்களோடு பரிட்சயப்பட்டு பல்வேறு வகையான எறிகணை செலுத்திகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும், அதன் ஆரம்பப் புள்ளி, மிக மெதுவாக ஆடிஅசைந்து செல்லும் இந்த ஆறு அங்குல மோட்டாரில் இருந்துதான் வெளிப்பட்டது.

அந்த மோட்டாருக்கு 'குட்டிசிறி'என்ற பெயரே இடப்பட்டது.

கோட்டை இராணுவ முகாமை நோக்கி அந்த மோட்டார், எறிகணைகளைச் செலுத்தத் தொடங்கியபோது, குட்டிசிறி அருகில் நின்றான்.

முதலாவது எறிகணை முற்றவெளிக்குள் பயனற்று விழுந்து வெடித்தது.

இரண்டாவது எறிகணை சற்று முன்னேறி, கோட்டை அகழிக்குள் விழுந்தது.

மூன்றாவது எறிகணை புலிகளின் ஆர்வமான பார்வைகளை ரசித்துக் கொண்டே, கோட்டை மதில் சுவரைத் தாண்டி உள்ளே விழுந்து அதிர்ந்தது.

மதிலின் மறைவிற்கு உள்ளே இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டு பலர் காயப்பட்டு இருந்தனர்.

அந்த எறிகணைதான், கோட்டையில் இருந்த ஆக்கிரமிப்பாளரின் நிம்மதியான உறக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது.

குட்டிசிறி வெடிமருந்து இயக்கம் தொடர்பாக நிறைந்த அறிவு பெற்றிருந்தான். அவன் பெரும்பாலானவற்றை அனுபவங்களில் இருந்துதான் கற்றுக் கொண்டான்.

இன்று உலகமே வியக்கும் தொழில் நுட்ப அறிவு எம்மிடம் இருக்கிறது என்றால் அதற்குள், பத்தாம் வகுப்புடன் கல்வியை இடைநிறுத்தி விட்டு இயக்கத்திற்குள் வந்த இவனின் பங்களிப்பு, வியக்கத்தக்களவில் நிறைந்து கிடக்கிறது.

சண்டைகளில் எவ்வளவு அதிகமாக தீவிரமாக இருந்தானோ அதேயளவு இளகிய மனமும் இவனிடமிருந்தது. தோழர்கள் ஆபத்துகளில் சிக்கும் பொழுதெல்லாம் அழுவான். அதுவும் அவனது இயல்பு.

வெற்றிகளைக்காணும் பொழுதெல்லாம் கட்டுப்படுத்த முடியாமல் மகிழ்ச்சியில் சிரிப்பான். கன்னங்கள் உயர்ந்து, கண்களும் சேர்ந்து சிரிக்கும் குழந்தையின் சிரிப்பு அது.

ஆறு சகோதரங்களிற்குப் பின்பு இறுதியாகப் பிறந்தவன் குட்டிசிறி. குடும்பத்தின் கடைசிப் பிள்ளைகளுக்கே உரித்தான பிடிவாதமும், அதிகாரமும் இந்தச் செல்லப்பிள்ளைக்கு இயக்கத்திற்குள்ளும் இருந்தது.

ஒருநாள், உலங்கு வானூர்தி ஒன்று யாழ் நகரை அண்டிய பகுதிகளில் வட்டமிட்டுப் பதிவதும், ரவைகளைத் தீர்ப்பதுமாக இருந்தது.

எறிகணைத் தொழிற்சாலைக்குத் தேவையான கழிவு இரும்புகளை ஏற்றி வந்த குட்டிசிறியின் "வான்" அந்த வானூர்தியின் இலக்கானது. சாரதியாக குட்டிசிறியே இருந்தான். அவனொரு சிறந்த சாரதி, எந்த நிலையிலும் பதட்டமில்லாமல் வாகனத்தைச் செலுத்தக் கூடியவன். இயக்கத்திற்குள் வருவதற்குச் சில வருடங்களுக்கு முன்னமே, அவனுக்கு வாகனங்களைச் செலுத்திய அனுபவம் இருந்தது.

அவனுக்காக அந்த உலங்குவானூர்தி பலமுறை பதிந்து தோற்றது.

தோழர்களின் கேலியான வரவேற்பிற்கு நடுவே அவன் முகாமுக்குள் நுழைந்தான். கிட்டண்ணையும் அங்கு நின்றார். அவனுக்கு கண்கள் கலங்கியிருந்தன. "எனக்கு அடித்துப் போட்டாங்கள்" என்று விம்மினான். அவனை அடித்துத் துரத்த வேண்டும் எனப் பிடிவாதமாக நின்றான். அந்தப் பிஞ்சின் மனதை கிட்டண்ணை புரிந்து கொண்டார். 'ஐம்பது கலிபர்' துப்பாக்கி பொருத்தப்பட்ட பிக்கப் வண்டியொன்று வெளியே சென்றது.

'ஐம்பது கலிபர்' துப்பாக்கியை குட்டிசிறி இயக்கினான். சிறிது நேரம் அவனுக்கும் உலங்கு வானூர்திக்கும் சண்டை. முடிவாக கீழே இருந்து வரும் கடுமையான எதிர்ப்பை உணர்ந்து வானூர்தி சற்று உயர்ந்தது; பின்பு மறைந்தது. இது அவனது ஒரு சம்பவம். இப்படி அவனின் கதை சொல்ல பல சம்பவங்கள் நிறைந்து போயுள்ளன.

கிட்ண்ணை குட்டிசிறியில் மிகவும் அன்பு வைத்திருந்தார். அந்நேரங்களில் மற்றைய எல்லோரையும் விட குட்டிசிறி சின்னவனாக இருந்தார். அதன் காரணமாகவும் எல்லாத் தோழர்களும் அவனில் பாசத்தைப் பொழிந்தார்கள். குட்டிசிறி கிட்டண்ணையில் உயிரையே வைத்திருந்தான். அக்காலங்களில், இராணுவ முகாம்களில் இருந்து புறப்படும் படையினருடன் ஒவ்வொரு நாளும் சண்டையிட வேண்டியிருந்தது. அப்போதெல்லாம் கிட்டண்ணைக்கு அருகில் நிழல்போல இவன் நிற்பான்.

தேசவிரோதிகளின் குண்டுவீச்சால், கிட்டண்ணை கால்களில் ஒன்றை இழந்தபோது, குட்டிசிறி வேதனையில் தவித்துத் துடித்தான்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டதன் பிற்பாடு, மேலதிக சிகிச்சைக்காக கிட்டண்ணை இந்திய விமானப்படை விமானம் ஒன்றில் இந்தியாவிற்குச் சென்றபோது, குட்டிசிறியும் அவருடன் சென்றான். இந்தியப் புலிகள் போர் ஆரம்பித்தபிற்பாடு, நீண்ட நாட்களாக கிட்டண்ணையுடன் பேச்சு வார்த்தைகள் நடாத்திய இந்திய அரசு, அவரையும் தோழர்களையும் கைது செய்து சிறையில் அடைத்தது. குட்டிசிறியும் கிட்டண்ணையுடன் கைது செய்யப்பட்டான்.

இந்திய விமானப்படை விமானம் ஒன்றில் இந்திய மண்ணில் இறங்கிய இவர்கள் மீது, முறையான அனுமதிப்பபத்திரங்கள் இன்றி இந்தியாவிற்குள் நுழைந்தார்கள் என்ற குற்றத்தை, இந்திய நீதித்துறை சுமத்தியது.

'தம்மை விசாரணை செயும்படியும் அல்லது தமிழீழத்திற்கு தம்மை அனுப்பும்படியும் கோரி' சிறையில், கிட்டண்ணை சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

இதன் விளைவாக, புலிப்படை வீரர்கள் கை கால்கள் இறுகப் பிணைக்கப்பட்ட



**லெப்.கேணல் குட்டிசிறி (இராசையா சிறிகணேசன்).**
**சுதுமலை வடக்கு, மானிப்பாய்.**
**பிறப்பு: 23-08-1967**
**வீரச்சாவு: 16-01-1993**

நிலையில் இந்திய விமானப்படை விமானம் ஒன்றில் ஏற்றப்பட்டு தமிழீழத்திற்கு கொண்டு வரப்பட்டார்கள். கிட்டண்ணை விடுதலை செய்யப்பட்டார். ஆனால், குட்டிசிறியும் மற்றைய தோழர்களும், தமிழீழத்திலிருந்த இந்தியப்படைமுகாம்களுக்கு நடுவில், தொடர்ந்தும் சிறை வைக்கப்பட்டார்கள்.

இந்தப் பிடிவாதம் நிறைந்த செல்லப் பிள்ளை, வளர்ந்ததும் பண்பட்டதும் இந்தியச் சிறைகளில்தான்.

இந்தியர்கள் தமிழீழத்திலிருந்து வெளியேறிச் செல்லும்போது குட்டிசிறியும் விடுதலை செய்யப்பட்டான். இப்பொழுது அவன் வளர்ந்திருந்தான். இயல்புகளில் கூட நிறைய மாற்றம். அமைதியாக இருந்தான். ஆனால், கன்னங்கள் உயர்ந்து கண்களும் சேர்ந்து சிரிக்கும் அவனது சிரிப்பு மட்டும் மாறவேயில்லை.

அதன் பின்பு, குட்டிசிறி தலைவரின் பாதுகாப்பு அணியில் ஒருவனாக இருந்தான். அவரின் அன்புக்குரிய குழந்தைகளில் அவனும் ஒருவன்.

அங்கு நின்று பல்வேறு வேலைகளில் ஈடுபட்டான். பெரும்பாலான வேலைகள் அவனது விருப்பத்திற்குரிய வெடிமருந்துத் தொழில்நுட்பமாகவே இருந்தது. ஆனால், சண்டைகளுக்குச் செல்ல வேண்டும் என்ற இவனது துடிப்பை பொதுவாக தடுத்து நிறுத்த முடிவதில்லை.

அவனது ஆர்வம், உற்சாகம், செயற்படும் பொழுது இருக்கும் உறுதி, வேகம் எல்லாமே வியக்கத்தக்கது. அவன் ஒரு பொழுதும் சோர்ந்து போவதில்லை.

குட்டிசிறியினது போராட்ட வாழ்வின் ஆரம்பம் எப்படி இருந்ததோ அதைப் போலவே, அவனது முடிவும் கிட்டண்ணைக்கு அருகிலே இருந்தது.

அது சோகமானது; நினைக்கவே இதயம் தாங்கா து. அது எப்படி இருந்திருக்கும்!

சண்டைக்களங்களில் எல்லாம் எம் -16 துப்பாக்கியுடன் கிட்டண்ணைக்கு அருகில் இருந்து, அவரின் கட்டளைகளை நிறைவேற்றியவன், இப்போதும் அப்படித்தான் நிமிர்ந்து உற்சாகமாக செய்திருப்பான்.

சாவின் விளிம்பில் நிற்பது அவனுக்கு நன்றாகவே தெரிந்திருக்கும். முன்பும் அப்படித்தான்; சாவுக்கு முன்னால் நின்று கொண்டுதான் அவன் கிட்டண்ணையின் கட்டளைகளை நிறைவேற்றினான். இப்போதும் ஒன்றும் வித்தியாசமாக இல்லை.

பதினாறு வயதில் சின்னவனாக இயக்கத்திற்கு வந்து கிட்டண்ணைக்கு முன்பு நின்றவன், நீண்ட ஒன்பது வருடப் போராட்ட வாழ்க்கையின் பின்பு, உயர்ந்த இளைஞனாக கிட்டண்ணைக்கு முன்பு நிமிர்ந்து நின்றிருப்பான்.

கட்டளைகளை மட்டும் மிகச்சரியாக, தவறேதும் இல்லாமல் செய்திருப்பான். சாவுக்கு முன்பாக கிட்டண்ணைக்கு அருகில் வந்திருப்பான், அவரைப் பார்த்துச் சிரித்திருப்பான்.

கன்னங்கள் உயர்ந்து, கண்களும் சிரிக்கும் குழந்தையின் சிரிப்பு......

அதுதான்......... அந்தச் சிரிப்புத்தான் இறுதியாக இருந்திருக்கும். ■


செங்கதிர் வெளியீடு
தரிசனம்
பார்வை - 8



வீடியோ இதழ் கேணல் கிட்டுவின் நிகழ்வுகள் சுமந்த சிறப்பிதழாக வெளிவந்துள்ளது.

* "கிட்டு எங்கள் வரலாற்று நாயகன்"
* மண்ணின் நிகழ்வுகள்
* கலை ஆக்கங்கள்
* புலம்பெயர்ந்த மக்கள் தொடர்பான நிகழ்வுகள் என்பவற்றை உள்ளடக்கியனவாக இச்சிறப்பிதழ் அமைந்திருக்கிறது.

இவ் ஒளிப்பதிவு நாடா மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வெளியிடப்படுகின்றதென்பது குறிப்பிடத்தக்கது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இன உணர்வுக் கவிதைகளும் தமிழீழ விடுதலைப் போராட்டமும்

யாழ். பல்கலைக் கழகத்தில் தமிழ்துறையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆய்வரங்கு 13-01-1993-ல் நடைபெற்றது. தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களின் தலைமையில் இடம் பெற்ற இவ்ஆய்வரங்குத் தொடரில், உதவி விரிவுரையாளர் செல்வி சந்திரா 'இனவுணர்வுக் கவிதைகளும் தமிழீழ விடுதலைப் போராட்டமும்- காசி ஆனந்தன், புதுவை இரத்தினதுரை கவிதைகள் பற்றிய ஆய்வு' என்ற தலைப்பில் தனது ஆய்வை மேற்கொண்டார்.

தமிழீழ விடுதலைப்போராட்டம் ஓர் அறிமுகம். இனவுணர்வுக் கவிதைகளின் முகிழ்ப்பு. காசி ஆனந்தன் கவிதைகள், புதுவை இரத்தினதுரை கவிதைகள், நிறைவுரை என்ற ஐந்து நிலைகளில் விரிவாக மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வு தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றின் வளர்ச்சிப்பாதையினையும், இவ்வளர்ச்சிப் பாதையில் காலந்தோறும் இனவுணர்வுக் கவிதைகள் எழுதிய கவிஞர்களையும் இனங்காட்டி நின்றதுடன், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து நிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் போராளிக் கவிஞர்களான (இவர்கள் இருவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொள்வதற்கு முன்னரே கவிஞர்களாக விளங்கியவர்கள்) காசி ஆனந்தன், புதுவை இரத்தினதுரை இருவரது கவிதைகளையும் சிறப்பாய்வு செய்வதாக அமைந்திருந்தது.

உலகளாவிய நிலையில் இன்று முனைப்படைந்து கொண்டு வருகின்ற தமிழீழப் போராட்ட வளர்ச்சிப்பாதையில் கவிதைக் கலையின் பங்களிப்பு கணிசமாக இடம் பெற்று வருவது நாம் அனைவரும் அறிந்ததே. இன்றைய தமிழீழ விடுதலைப் போராட்ட சூழ்நிலையில் கவிஞர் காசி ஆனந்தனும் , கவிஞர் புதுவை இரத்தினதுரையும் தமது படைப்புக்கள் (கவிதைகள், இசைப்பாடல்கள்) மூலம் தமிழ் மக்கள் மத்தியில் நிலையான ஓர் இடத்தினைப் பெற்றுள்ளனர் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. குழந்தைகள் முதல் முதியோர் வரை தமிழீழ மெங்கும் ஒலித்துக் கொண்டிருக்கும் விடுதலைப் பாடல்களை விருப்பத்தோடு கேட்டு மகிழ்கின்றனர். விடுதலைப் போராட்டத்தோடு மக்களை ஒன்றிணைத்த இசைப்பாடல்களைப் பெருமளவில் எழுதி, பெருகிப்பாய்ந்தோடும் போராட்ட வரலாற்றில் இவ்விரு கவிஞர்களும் சங்கமித்து தங்களது படைப்பாற்றல் மூலம் ஒரு சாதனையை நிலை நாட்டி நிற்கின்றனர்.

இன்றைய தமிழீழ சமூக வாழ்வு நிலைகளையும், போராட்ட உணர்வுகளையும் வெளிப்படுத்தி நிற்கும் இவர்களது படைப்புக்களைக் காலத்தின் கட்டாய தேவையை உணர்ந்து தனது ஆய்வுத்தலைப்பாக தேர்ந்தெடுத்து (இவ் ஆய்வு தமிழ்ச் சிறப்பு இறுதியாண்டு தேர்வுக்குரிய ஆய்வுக்கட்டுரையாக 1991-ல் சமர்ப்பிக்கப்பட்டது)



ஆய்வு செய்ய முன் வந்த செல்வி சந்திராவும், பல்கலைக்கழக மட்டத்திலே இவ் ஆய்வை ஒழுங்கு செய்து நடாத்திய தமிழ்த்துறையினரும் பாராட்டுக்குரியவர்கள்.

இதுவரை எவராலும் ஆய்வு செய்யப்படாத அதே சமயம் , ஆய்வு செய்யப்பட வேண்டிய தொன்றாக இருந்து வந்த காசி ஆனந்தன், புதுவை இரத்தினத்துரை கவிதைகள் பற்றிய இவ் ஆய்வு முதன் முதல் மேற்கொள்ளப்பட்ட முயற்சி ஆதலாலும், ஆய்வுத் தலைப்பிற்கு ஏற்ப தமிழீழ விடுதலைப்போராட்ட அறிமுகம், இனவுணர்வுக்கவிதைகள் முகிழ்ப்பு காசி ஆனந்தன், புதுவை இரத்தினத்துரை கவிதைகள் சிறப்பாய்வு எனப் பல்வேறு முக்கிய விடயங்களை உள்ளடக்கி அமைந்திருந்ததாலும் மிக நீண்டு சென்றது எனினும் போராளிக் கவிஞர்கள் இருவரின் படைப்பாற்றலையும் இப் படைப்புக்களின் தேவையையும் விளங்கிக் கொள்ள வழி சமைத்தது.

களக்கவிஞர்களின் ஆக்கங்களாக சிறுகதைகள், நாடகங்கள், கட்டுரைகள், கவிதைகள், இசைப்பாடல்கள் எனப் பல்வேறுபட்ட கலைப்படைப்புக்கள் இன்று எம்மத்தியில் நாள்தோறும் வந்து கொண்டிருக்கின்றன. இந்தப் 'புதிய அலை' ஒரு வரலாற்று நிகழ்வாக அமையும் தன்மையைப் பெற்று நிற்கின்ற வேளையில், இரு கவிஞர்களினதும் கவிதைகளையும் எடுத்து நோக்கினால் இவர்கள் இருவருமே தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்து கொள்ள முன்னரே கவிஞர்களாக விளங்கியவர்கள் என்பதையும், இருவரும் கவிதைகளையும், இசைப்பாடல்களையும் எழுதியவர்கள் என்பதையும் மனங் கொள்ள வேண்டியவர்களாகின்றோம். கவிதை வேறு, இசைப்பாடல் வேறு. இவர்களின் கவிதைகள் சில பின்னர் இசை சேர்க்கப்பட்டு இசைப்பாடல்களாக ஒலிப்பதிவு செய்யப்பட்டன. பின்னர் இசைப்பாடல்கள் தொகுக்கப்பட்டு நூலுருப் பெற்றபோது நூலில் (எழுச்சிப் பாடல்கள்) இடம் பெற்றன. - [(உ-ம்) காசி ஆனந்தனின் "காசி ஆனந்தன் கவிதைகள்" தொகுதியில் இடம்பெற்ற மறவர் படைதான் தமிழ்ப் படை என்ற பாடல் , மானம் எனுமொரு பானையில் வாழ்வெனும் தீனி சமைத்தவனே என்ற பாடல்] இவ்விரு பாடல்களும் எழுச்சிப்பாடல் தொகுதி ஒன்றில் இடம்பெற்றுள்ளன. இந்த வகையிலே கவிதைகளுக்கும் , இசைப் பாடல்களுக்குமுள்ள வேறுபாடு ஆய்வாளரால், சுட்டிக் காட்டப்படவில்லை.

மேற்கூறிய இரு கவிஞர்களின் கவிதைகளில் அனேக கவிதைகளை ஆய்வாளர் தமது ஆய்வில் சுட்டிக்காட்டியிருந்த போதிலும், புதுவை இரத்தினதுரையின் கவிதைத் தொகுதியில் மிகவும் சிறப்பானது என எல்லோராலும் எடுத்துரைக்கப்படும் "ஒரு தோழனின் காதல் கடிதம்" என்ற தொகுதியில் உள்ள கவிதைகளையும், மிக அண்மையில் வெளிவந்து தமிழீழ மக்கள் அனைவரின் பாராட்டையும் தட்டிக்கொண்ட "நெய்தல் ஒலிப்பதிவு நாடாவில் உள்ள வெள்ளி நிலா விளக்கேற்றும் நேரம். .. , ஆழக்கடலெங்கும், என்ற இசைப்பாடல்களையும் , மாவீரர் தினத்தில் (26-1-1992) மாவீரர் துயிலும் இல்லங்களில் முதன் முதல் ஒலிப்பரப்பாகி எல்லோரையும் கண்ணீர் சிந்த வைத்த "எங்கே எங்கே ஒரு கரம் விழிகளை இங்கே திறவுங்கள்" என்ற பாடலடியை தன்னகத்தே கொண்ட பாடலையும் , காசி ஆனந்தனின் "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்" (இசைப்பாடல்) என்ற இனிய பாடலையும் தியாகி திலீபனின் தற்கொடையின் பின் "ஐயா திலீபன் எங்கையா போகின்றாய்" (ஈழமுரசில் வெளிவந்தது) என்ற நெஞ்சையுருக்கி இந்தியாவின் துரோகத்தை எடுத்துரைக்கும் வரிகளைக் கொண்ட (கடலிற்கு அப்பாலே கரையுண்டு என்றிருந்தோம் . கரையே கடலானால் எங்கு போய் கால் வைப்போம்.) கவிதையையும் இவ் ஆய்வில் இணைந்திருந்ததால் மேலும் சிறப்பாக அமைந்திருக்கும் என்று எண்ணத் தோன்றுகிறது.

இதைவிட காலந்தோறும் இனவுணர்வுக் கவிதைகள் எழுதிய கவிஞர்களின் பெயர்களைக் குறிப்பிட்டிருந்தபோதிலும் அவர்களின் கவிதைகள் பல எடுத்துரைக்கப்படவில்லை. (உ-ம்: பண்டிதர் க. சச்சிதானந்தம் அவர்களின் சாகும்போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும், என் சாம்பலிலும் தமிழின் மணம் வீச வேண்டும்)

தமிழீழத் தேசியப் போராட்டத்தில் பல்வேறு கவிஞர்களால் -கலைஞர்களால் ஆக்கப்பட்டு வரும் தரமான படைப்புக்கள் ஒவ்வொன்றும் தனித்தனி ஆய்வுக்கு உட்பட வேண்டியவை. இவ்வகை ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டியது எமது வரலாற்றுக் கடமையாகும். முன்மாதிரியாக மேற்கொண்ட செல்வி. சந்திராவின் ஆய்வைத் தொடர்ந்து மேலும் மேலும் ஆய்வுகளும், விமர்சனங்களும் மேற்கொள்ளப்பட வேண்டும். அன்றைய ஆய்வரங்கில் சபையோர் கருத்தில், ஆய்வுத் தலைப்பையும் அய்வாளரையும் பாராட்டி இதே போன்ற ஆய்வுகள் தொடர வேண்டும் என்ற பாராட்டுக் குறிப்பொன்றும் அங்கிருந்த 'சுவைஞர்' ஒருவரால் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும். ■

**- நிலா -**

## பி. பி. சி. தொலை..

றனரெனவும் அத்துடன் அரச சார்பற்ற சர்வதேச தொண்டர் அமைப்புக்கள் சர்வதேச மன்னிப்புச்சபை, ஏசியா வோட்ச், சர்வதேச யூரர் ஆணைக்குழு போன்ற நிறுவனங்கள் இந்த மனித உரிமை விவகாரங்களை ஆராய எமது நாட்டில் அனுமதிக்கப்படுவர்" எனக் கூறி மீளவும் சர்வதேச சமூகத்தவர்களை ஏமாற்றுகிறார். உண்மையில் எந்த வெளிநாட்டுக்காரர் சிறிலங்காவில் கால் வைத்தாலும் வடக்கு-கிழக்கிற்கு செல்வதற்கு நுழைவு அனுமதி வழங்குவதில்லை. பாதுகாப்பற்ற பிரதேசம் எனச் சாட்டுக் கூறி கொழும்பில் வைத்தே அவர்களுக்கு தகவல்கள் வழங்கப்பட்டு திருப்பி அனுப்பப்படுவர். தமிழினத் துரோகிகளை கொண்டு பேட்டிகள் கொடுக்க வைத்து தமிழர்களுக்கு பிரச்சினையே இல்லை என்பது போல் காட்டி விடுவர். கிழக்கு மாகாணம் வவுனியா போன்ற பகுதிகளுக்கு ஒரு சிலரை அழைத்து சென்றாலும் அங்கும் அவர்கள் அரச ஆதரவாளர்களையே சந்திக்க அனுமதிப்பர். திருச்சபைகளைச் சேர்ந்த பலர் உண்மைகூற விரும்பினாலும் இராணுவம் தொல்லைதரும் எனும் அச்சத்தில் மௌனமாகி விடுவர். இதுவே பிரேமதாசா வெளிநாட்டினர்க்கு சிறிலங்கா நிலையை விளக்குவதற்கு கையாளும் உத்திகள். இதனையும் அவர் கூறியிருந்தால் நன்றாகயிருந்திருக்கும்.

இப்பேட்டியின்போது பிரேமதாசா "வடக்கு-கிழக்கு மக்களுக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளையும் மற்றும் அவர்கள் பெற வேண்டியவற்றையும் நாம் வழங்கி வருகின்றோம். ஆனால் நாம் அவ்வாறு கொடுக்கின்ற பொருட்களை பயங்கரவாத சக்திகள் அபகரித்து வருகின்றனர். இவை பொது சனங்களுக்கு செல்லும் பொருட்கள். நாட்டின் அப்பகுதிகளுக்கு செல்லும் பாதையைக் காணும் விடயத்தில் கூட அதாவது மக்கள் சுதந்திரமாக போய்வருவதற்கான ஏற்பாட்டில் விடுதலைப்புலிகள் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவில்லை". என அப்பட்டமான பொய் கூறியுள்ளார்.

உண்மையில் பொருளாதாரத் தடைகளாலும் போக்குவரத்து முற்றுகையாலும் வடக்கு-கிழக்கு மக்களை வருத்தும் சிறிலங்கா அரசு, இவற்றின் விளைவாக சோமாலியா போன்ற ஒரு நிலை ஏற்பட்டால் அப்பழியை திசை திருப்புவதற்காக விடுதலைப்புலிகள் பாதைகளை கூடத் திறக்க அனுமதிக்கிறார்களில்லை எனப் பிரச்சாரம் செய்கின்றது. சிறிலங்கா அரசு தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தை நடாத்துகின்றது. மக்களுக்கு எதிராக யுத்தம் செய்வது யுத்தக் குற்றம். சர்வதேச சமூகத்திடம் யுத்தக் குற்றச் செயலில் இருந்து தாம் தப்புவதற்கு பிரேமதாசா செய்யும் பொய்ப்பிரச்சாரமே. விடுதலைப்புலிகள் உணவைப் பறிப்பதற்காகவும் பாதைகளை மூடி வைத்திருப்பதாகவும் கூறும் கதை உண்மையில் மக்களை உற்பத்திப்போர் மூலம், போர்க் கால பொருளாதாரத் திட்டங்கள், மாற்றீட்டு வழிகள் பிரதியீடுகள் மூலமும் புலிகள் பட்டினி நிலை ஏற்படாது பாதுகாத்து வருகின்றனர்.

இதற்காக பெருந்தொகையான பணம் உற்பத்திக் கடனாக மக்களுக்கு கிடைக்க தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வழி செய்து வருகின்றது. பொதுமக்கள் பாதுகாப்பாக, பயணம் செய்வதற்காக மக்கள் பயணம் செய்யும் பாதைகளிலிருந்து விலகி நிற்கும்படி இராணுவத்தை புலிகள் கேட்டுவருகின்றனரேயொழிய பாதையை திறக்க மறுக்கவில்லை இதுவே உண்மை. ■

## எங்கட கிட்டு....

"சமாதானத்தை உங்களுக்கு விட்டுச் செல்கின்றேன். என் சமாதானத்தையே உங்களுக்குத் தருகின்றேன்" என்று கூறி தனது 33 ஆவது வயதில் சிலுவையில் மரித்தார் இறைமகன் இயேசு.

அமைதிகளை ஏற்படுத்துவதற்காக முயற்சிகளை மேற்கொண்டு சமாதானத் திட்டங்களோடு, சமாதானத் தூதுவராக பயணம் வந்த வேளை வங்கக் கடலிலே தீயோடு சங்கமித்துக் கொண்ட தமிழீழத் தாயின் மகன் கிட்டு!

"இயேசுவின் சாவு மகிமையின் வாசலாகும்" என்பார்கள்.

'கிட்டு' அவர்களின் வீரச்சாவு தமிழீழத்தின் வாசலாகப் போகின்றது. ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கிழக்கில் துன்பத்தின் மத்தியிலும் மனோதிடத்துடன் வாழும் மக்கள்

## * மட்டு – அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதியின் பேட்டி

"அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் தமிழ்க் கிராமங்கள் மீது இராணுவம் தாக்குதல் நடத்துவதைத் தொடர்ந்து மக்கள் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழ்கின்றார்கள். இந்தத் தாக்குதலுக்குப் பெரும்பாலும் எல்லைப் புறக்கிராமங்களே இலக்காகின்றன. இராணுவம், பொலிஸ் மற்றும் முஸ்லீம் காடையர்களின் வன்முறைகள் அன்றாட வழக்கமாகிவிட்டன. இன்றல்ல, நேற்றல்ல பல காலங்களாகவே தமிழ் மக்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. இந்த அநியாயச் செயலுக்கு அப்பாவிப் பொதுமக்களே பலியாகின்றார்கள். சர்வதேச செஞ்சிலுவைக் குழு, கெயர் மற்றும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஆகிய எல்லாமே இங்கு செயற்படுகின்றன. ஆனால் இராணுவத்தின் கெடுபிடிக்கும் அச்சுறுத்தலுக்கும் மத்தியில் மனித நேய ஸ்தாபனங்களால் அர்ப்பணிப்புடன் செயல்பட முடியவில்லை."

மட்டக்களப்பு மாவட்ட விசேட தளபதி கருணாவை ஈழநாதம் செய்தியாளர் பேட்டி கண்டார். அப்போது அவர் இவ்வாறு கூறினார்.

கிழக்கில் இராணுவத்தின் அனர்த்தங்களால் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் சிற்றூர்களும், கிராமங்களும் தமிழர்களின் பூர்வீக ஊர்கள். இந்த ஊர்களில் வாழும் மக்களின் ஜீவனோபாயத் தொழில் வேளாண்மை. ஊர் முழுக்க விவசாயம் செய்யப்பட்ட பூமியில் இப்போது பத்து வீதம் தான் விவசாயம் செய்யப்படுகிறது. நெற்பயிர்கள் அறுவடைக்குத் தயாராயிருக்கும் காலங்களில் இராணுவம் ஊடுருவி அறுவடையைக் குழப்புகிறது. இம்முறையும் நெல்வயல்கள் பயன் கொடுக்கத் தொடங்கியிருக்கும் காலத்தில் இராணுவம் MOON LIGHT OPERATION என்ற இராணுவ நடவடிக்கையைத் தொடங்கியிருக்கிறது. இந்த இராணுவ நடவடிக்கை விவசாயக் கிராமமான படுவான் கரையில் முடுக்கி விடப்பட்டுள்ளது. நெற்கதிர்கள் தலை சாய்த்து நிற்கும் இந்த நேரத்தில் தமிழ்க் கிராமங்களின் பொருளாதாரத்தை கெடுத்துவிடும் நோக்கத்துடன் இராணுவ நடவடிக்கை திட்டமிட்டு நடத்தப்படுகிறது என்றார் கருணா.

### அரசின் நடவடிக்கைகள்

அவசரமாக - உடனடியாக பிரதேச சபைகளை நிறுவ அரசு பிரயத்தனம் செய்து வருகிறது. ஆடைத் தொழிற்சாலையை நிறுவுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுகிறதாம். ஜனாதிபதியின் நடமாடும் சேவை இனி மட்டக்களப்பில் தான் என்று சொல்லப்படுகிறது. குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கவே இந்த நடவடிக்கைகள் எல்லாம். இவையெல்லாம் காலம் கடந்த நடவடிக்கைகள். இந்த நடவடிக்கைகளினால் தமிழ் மக்கள் மனம் குழம்பிவிடுவார்கள் என்று அரசு எதிர்பார்க்கிறது. இதுக்கெல்லாம் மக்கள் ஆதரவு இல்லை. வெற்றி தராது.

### கல்வி நிலையங்கள்

ஏலவே அம்பாறையும், மட்டக்களப்பும் கல்வியில் பின்தங்கிய மாவட்டங்கள். இப்பொழுது கல்வியில் பாரிய பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. பிள்ளைகள் பள்ளிக்கூடம் செல்வதற்கு வாகனப் போக்குவரத்து குறைவு. மாணவர்கள் தலைநிமிர்ந்து சுதந்திரமாக நடமாட முடியாத நிலைமை. முன்பு நிரம்பி வழிந்த சிவானந்தக் கல்லூரி, புனித மைக்கல்ஸ், இந்துக் கல்லூரி, மத்திய கல்லூரிகளில் அக்கம் பக்கத்தில் உள்ள மாணவர்கள் தான் கல்வி பயில்கின்றார்கள். வகுப்பறைகள் காற்று வாங்குகின்றன. பல்கலைக் கழகமும் பெயருக்காக அல்லாது பெயரளவில் செயற்படுகின்றது. சுதந்திரமான நடமாட்டம் இராணுவத்தினரால் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் பல்கலைக்கழக ஆசிரியர்களும், மாணவர்களும் பாடத்தோடு இணைந்த புற வேலைகளில் ஈடுபடுவதில்லை.

### சுகாதாரமும் மருத்துவமும்

வெளிநாட்டு டாக்டர்கள் மட்டக்களப்பில் பணிபுரிகிறார்கள் என்று மருத்துவத்திற்கும் ஒரு சாயம் பூசப்பட்டுவிட்டது. பாகிஸ்தான் டாக்டர்கள் மட்டக்களப்பு பெரிய ஆஸ்பத்திரியில் தான் வேலை பார்க்கிறார்கள். பாகிஸ்தான் டாக்டர்களின் சேவை கிராம மக்களுக்கு எட்டுவதில்லை. ஆதார வைத்திய சாலைகளின் பெயர்ப்பலகைகள் மட்டும்தான் மாத்திரம்தான் தொங்கிக் கொண்டுள்ளன. சண்டையைக் காரணம் காட்டி வாகரை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள ஆஸ்பத்திரி மூடப்பட்டுள்ளது. இதனால் பத்து கிராமத்திற்கும் மேற்பட்ட மக்கள் துன்பப்படுகிறார்கள். மருந்துத் தடையால் ஆஸ்பத்திரியில் மருந்துத் தட்டுப்பாடு. அரச அதிபர் இதுகுறித்து அதிக கவனம் எடுப்பதாக இல்லை. குழந்தைகளுக்கு ஊட்டச்சத்துள்ள உணவு கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் குறைவு.

### நிதி நிலைமை

மக்கள் மத்தியில் பணப்புழக்கம் இல்லை. உணவுப் பொருட்கள் சிறிதளவு கிடைத்தாலும் அவற்றைக் கொள்வனவு செய்யமுடியாத நிலை. மீன்பிடி தடை செய்யப்பட்டிருப்பதால் மீனவருக்குப் பணவருவாய் இல்லை. வாவியில் இறால் பிடிக்கலாம் என்றாலும் சந்தைப்படுத்தும் வசதிகள் இல்லை. மற்றும் கமக்காரர் நிலையும் இதேதான்.

### கிழக்கில் மக்களின் இடப் பெயர்ச்சி

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் கிராமத்திலிருந்து வெளியேறிய மக்கள் கோமாரியில் வாழ்கிறார்கள். மல்லிகைத்தீவு, வீரமுனை, சென்றல் காம்ப் ஆகியன பாரம்பரிய தமிழ்க்கிராமங்கள். இராணுவ அனர்த்தங்களால் இங்கிருந்து வெளியேறிய மக்கள் திருக்கோவில், தம்பிலுவில், அக்கரைப்பற்று ஆகிய இடங்களில் குடியேறி முகாம்களில் வாழ்கிறார்கள். முகாம்களிலும் அடிப்படைச் சுகாதாரத் தேவைகள் கூடச் சரியாகக் கவனிக்கப்படவில்லை. மகாவலி அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் தமிழ்க் கிராமங்களில் சிங்களக் குடியேற்றங்கள் இடம் பெறுகின்றன. புல்லுமலையில் சிங்கள மக்கள் குடியேறப்படுகிறார்கள். மட்டக்களப்பு -பொலநறுவை எல்லைக் கிராமங்களில் அமைந்துள்ள கரும்பளை, முத்துக்கல், சொறிவில் ஆகிய தமிழ்க்கிராமங்களில் இருந்து திட்டமிட்ட அடிப்படையில் தமிழ் மக்கள் வெளியேற்றப் படுகிறார்கள்.

தமிழ் - முஸ்லீம் உறவுபற்றிக் கேட்டபோது -

கடந்த டிசம்பர் 26ம் திகதி இராணுவ முகாமில் இருந்து சுமார் 300 யார் தொலைவில் (மியாம் குளச் சந்தி) இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் முஸ்லீம்களான உதவி அரசாங்க அதிபர், சட்டத்தரணி, மற்றொரு முஸ்லீம் உள்ளிட்ட தமிழரான சாரதியும் உயிரிழந்தனர். முஸ்லீம்கள் விழிப்புடன் இருந்தபடியால் உண்மையை அறிந்து கொள்ள முடிந்தது. இந்த கண்ணிவெடித் தாக்குதலில் இராணுவம் சம்பந்தப்பட்டிருப்பதை முஸ்லீம்கள் அறிந்து கொள்ள அதிககாலம் எடுக்கவில்லை. வெளியூர் முஸ்லீம்களும் இராணுவத்தின் இரட்டை வேடத்தைப் புரிந்து கொண்டனர். இராணுவத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடத்தினர். இப்போது அரசியலில் விசாரணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று கூறிய அவர் -

நகரங்கள் தான் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. மட்டக்களப்பில் புலிகளை அடக்கியதாக இராணுவம் பிரசாரம் செய்கின்றது. இராணுவம் கிராமப் பக்கம் திரும்பியும் பார்க்க முடியாது. கிராமங்கள் எமது கட்டுப்பாட்டில் உள்ளன. இராணுவத்தின் மீது எமது தாக்குதல்களும் வெற்றிகளும் உலகிற்கு உண்மையை எடுத்துக் காட்டுகின்றன. எமது தாக்குதல்களினால் தோல்வியுற்ற இராணுவம் அப்பாவிப் பொதுமக்களைத் தாக்குவதில் ஈடுபட்டுள்ளது. இராணுவத்துடன் சேர்ந்தாற்போல் தேசவிரோத கும்பல்களும் தமிழர்களுக்கு இன்னல்களை ஏற்படுத்துகின்றன.



மக்கள் மத்தியில் எமது செயற்பாடு அதிகரித்துக் கொண்டே வருகின்றது. 'சுதந்திரச்சுடர்' என்ற மாதாந்தச் சஞ்சிகையையும் தாய் மண் என்ற வாரப்பத்திரிகை ஒன்றையும் வெளியிடுகின்றோம். மண்மீட்பு என்ற ஒலிப்பதிவு நாடாவையும் வெளியிட்டுள்ளோம். இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களுக்கும் இவை கடத்திச் செல்லப்படுகின்றன.

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களில் கூட மக்கள் மாவீரர் தினத்தைக் கொண்டாடினார்கள். தளபதி கிட்டுவின் மரணம் மக்கள் மத்தியில் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது. துன்பங்களின் மத்தியிலும் மக்கள் நம்பிக்கையுடன் வாழ்கின்றார்கள். தலைவர் பிரபாகரன் மீது நம்பிக்கையுடனும், விடிவு வரும் என்ற மனோதிடத்துடனும் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றார். ■

# பி.பி.சீ தொலைபேசியில்

# சிறீலங்கா ஜனாதிபதி கூறியவைக்கு ஒரு பதில்!

சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா, பி. பி. சி. யின் உலக சேவை 07-03-93ல் நடாத்திய, "தொலைபேசியில்" என்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, தொலைபேசிக் கேள்விகளுக்கு பதிலளித்தார். அந்நேரத்தில் இலண்டனிலிருந்து அந்தோனிப் பிள்ளை என்பவர் "இலங்கையின் பாதுகாப்புச் செலவீனத்தில் 30% பாதுகாப்புக்குச் செலவிடப் படுகின்றதென அறிவிக்கப்பட்டுள்ளது. உதவி வழங்கும் நாடுகளிலிருந்து கிடைக்கும் உதவிகள் இதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. இலங்கை போன்ற ஒரு வளர்முக நாடு இந்த அளவிலான தொகையைப் பாதுகாப்புக்காகச் செலவிட முடியுமா? என்று கேள்வி தொடுத்தார். அதற்கு பதிலளித்த சிறிலங்கா ஜனாதிபதி "நீங்கள் கூறியதை நான் பூரணமாக ஏற்றுக் கொள்கின்றேன். இந்த வளங்கள் எல்லாம் எமது மக்களின் நலன்களுக்கானதாகும்.

வடக்கு-கிழக்கு மக்களுக்கு உணவு மருந்து வகைகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை வழங்குவதற்கு அரசாங்கம் பெருந்தொகைப் பணத்தைச் செலவிடுகின்றது. வடக்கு மக்களின் நலன்களுக்காக நாங்கள் செய்யும் வேலைகளுக்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர், சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் ஆகியன சான்றுபகரும். பெரும் செலவில் இந்த மனிதாபிமான சேவைகளை நாங்கள் செய்து வருகின்றோம் என்பதை அவர்கள் நன்கறிவார்கள். அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதன் மூலம் இப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதே எமது அரசின் கொள்கையாகும். அப்பாவிப் பொதுமக்களைப் பாதுகாக்கவே இராணுவம் அங்கு இருக்கின்றது" என்றார்.

இந்தப் பதில் அப்பட்டமான பொய்யுரையாகும். வடக்கிலும் கிழக்கிலும், மக்களை கொன்று குவிப்பதையும் பட்டினி நிலைக்கு உள்ளாக்குவதையும், ஆற்றல்கள் மூல வளங்கள் அனைத்தையும் அழிப்பதையும் இலக்காகக் கொண்டு இயங்கி வரும் பிரேமதாசா இவற்றை தான் மனிதாபிமான சேவை யென்று குறிப்பிட்டாரோ தெரியவில்லை. எந்த இராணுவம் தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து தமிழின அழிப்புக்கும் நாட்டின் உள்ளேயும் வெளியேயும் தமிழர் அகதிகளாக வாழ்வதற்கும் காரணமாக உள்ளதோ அந்த ஆக்கிரமிப்புப் படையினை "பொதுமக்களைப் பாதுகாக்கும்" கருவியாக பிரேமதாசா வர்ணிக்கின்றார். போதாக்குறைக்கு தான் செய்யும் இந்த மனிதாய உணர்வற்ற கைங்கரியங்களை மூடி மறைப்பதற்கு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தையும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணையாளரையும் துணைக்கு அழைப்பது வேதனைக்குரிய விடயம்.

சிறிலங்கா ஜனாதிபதியிடம் "சிறிலங்காவில் காவலில் உள்ளவர்கள் சித்திரவதைக்குள்ளாவதாக சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் குற்றம் சாட்டுகின்றனவே" எனக் கேட்டதிற்கு பதிலளிக்கும் பொழுதும், "சர்வதேச பிரதிநிதிகள், மனித உரிமை தொடர்பான ஐ. நா. ஆணைக்குழு, பலநாட்டு அரசுகளின் தூதுக்குழுக்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்கின்

தொடர்ச்சி 9ம் பக்கம் ....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உணவையும் போர்க் கருவியாக்காதே !
# திரண்டெழுந்த மக்கள் ஆவேசம்

**வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதி பிரேமாவிற்கு மகஜர்**

**யா**ழ்ப்பாண மாவட்ட மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு வெகுஜன அமைப்புக்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் தொழிற்சங்கங்கள், ஏனைய சன சமூக அமைப்புக்கள் ஆகியனவற்றை பிரதிநிதிப்படுத்தும் வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிகளாகிய நாம் வடபகுதி மக்கள் படும் பெரும் அவலங்களையும், துயரங்களையும் தங்களின் மேலான கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்.

தமிழீழப் பிரதேசங்களில் தமிழ் மக்களுக்கு எதிராக அர்த்தமற்ற பாரிய யுத்தத்தை நடாத்திக் கொண்டிருக்கிறீர்கள். இவ்வாறான அவசியமற்ற போரினால் தமிழ் மக்கள் நாளாந்தம் மிகப் பெரிய பேரழிவைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த முப்பத்திரண்டு மாத காலமாக தமிழ் மக்களுக்குப் பொருளாதாரத்தடை விதிக்கப்பட்டுள்ளது. சொந்த மக்களுக்கு எதராக இவ்வாறான பொருளாதாரத்தடையை விதிப்பது மனிதாபிமானமற்ற கொடூரமான செயலாகும்.

32 மாதமாக யாழ் உணவுத்திணைக்களத்திற்கு எவ்வித உணவுப் பொருட்களும் அனுப்பி வைக்கப்படவில்லை. யாழ் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் (சி. டபிள்யூ. ஈ.) விமானக் குண்டு வீச்சினால் சேதமாக்கப்பட்டுள்ளது. இங்கும் முப்பத்திரண்டு மாதகாலமாக உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்படவில்லை. இதனால் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உணவுப் பொருட்களைப் பெறமுடியாமல் கஸ்டப்படுகிறன.

இந்நேரத்தில் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்படும் சிறு அளவிலான உணவுப் பொருட்கள் யாழ் மாவட்ட மக்களின் உணவுத் தேவையில் 20 வீதத்தைக் கூட பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கவில்லை.

யாழ் மாவட்ட மக்களிற்கு சராசரி வருடமொன்றிற்கு பின்வரும் அளவிலான உணவுப் பொருட்கள் தேவையென யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

| | |
|---|---|
| அரிசி | - 82, 500 மெற்றிக் தொன் |
| மாவு | - 29, 700 மெற்றிக் தொன் |
| சீனி | - 18, 150 மெற்றிக் தொன் |
| தானிய வகைகள் | - 12, 375 மெற்றிக் தொன் |

யாழ் மாவட்டத்தில் உணவுக் கையிருப்பு முழுமையாக முடிந்துவிட்டது. கொழும்பில் இருந்து அத்தியாவசிய உணவுப் பொருட்களைக் கொண்டு வருவதற்கான பொருளாதாரத் தடை, கடல், தரை மார்க்கமான போக்குவரத்து துண்டிக்கப்பட்டு தடை செய்யப்பட்டு இருப்பதால் பிற மாவட்டங்களில் இருந்து கூட்டுறவுச் சங்கங்கள், தனியார் வர்த்தகர்கள் லொறிகள் மூலம் உணவுப் பொருட்களைக் கொண்டுவரமுடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

பொருட்களின் விலை அதிகரிப்பு 50 வீதம் முதல் 500 வீதம் வரை ஏற்பட்டுள்ளது. இதனால் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் மக்கள் மேலும் பாதிப்புக்குள்ளாகி பட்டினிச் சாவை எதிர் நோக்க வேண்டிவரும்.

தொழிற்சாலைகள், தொழில் வழங்கும் நிறுவனங்கள், இராணுவ நடவடிக்கை, இராணுவ ஆக்கிரமிப்பு, கண்மூடித்தனமான முப்படைகளின் தாக்குதல் காரணமாக அழிக்கப்பட்டுள்ளன, அல்லது மூடப்பட்டுள்ளன. இதனால் இரண்டு இலட்சத்து அறுபதினாயிரம் பேர் அறவே தொழில் வாய்ப்பினை இழந்துள்ளனர். அன்றாடம் கூலிவேலை செய்த சுமார் இரண்டு இலட்சத்துப் பத்தாயிரம் பேர் தொழில் வாய்ப்பினை இழந்து எவ்வித வருமானமுமின்றி நிர்க்கதியாகியுள்ளனர். இவர்களால் எப்படி அதிகவிலை கொடுத்து பொருட்களை வாங்க முடியும். உதாரணமாக சில பொருட்களின் விலை வித்தியாசங்களைத் தருகின்றோம்.

| பொருட்கள் | கொழும்பு விலை | யாழ் மாவட்ட விலை |
|---|---|---|
| நாட்டரிசி | 18. 00 | 46. 00 |
| வெள் பச்சை அரிசி | 15. 50 | 34. 00 |
| மாவு | 11. 30 | 26. 00 |
| மண்ணெய் | 10. 00 | 210. 00 |
| தேங். எண்ணெய் | 45. 00 | 155. 00 |
| பருப்பு | 55. 00 | 110. 00 |
| தீப்பெட்டி | 1. 00 | 6. 00 |

ஆதலால் பொருளாதாரத் தடையை நீக்கி எமது மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியளவு தாராளமாக அத்தியாவசிய உணவுப் பொருட்களை அனுப்பி வைத்து பட்டினிச் சாவிலிருந்து எமது மக்களைக் காப்பாற்றுமாறு வேண்டுகிறோம்.

யாழ் குடா மக்களின் ஓரேயோரு தரைமார்க்கமான போக்குவரத்துப் பாதை ஆனையிறவாகும். இப்பாதை 1990 யூன் மாதம் 10 ம் திகதி யுத்தம் தொடங்கியவுடன் மூடப்பட்டுவிட்டது. இதனால் எமது மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் பயங்கரமானவையாகும். அதன் பின்னர் கொம்படி, ஊரியான், கிளாலி, பூநகரி கடல் நீரேரி ஊடாக பிரயாணம் செய்ய வேண்டி ஏற்பட்டது. போக்குவரத்துக் கஸ்டம் காரணமாக ஒரு தனிமனிதன் எவ்வளவு பாதிப்புக்குள்ளாவான் என்பது தாங்கள் அறிந்ததே. முப்படைகளின் அட்டூழியங்கள், அடாவடித்தனங்களுக்கு மத்தியில் வேறுவழியின்றி கடல்நீரேரி ஊடாகப் பிரயாணம் செய்ய வேண்டிய தேவையேற்பட்டது.

02-01-93 அன்று கிளாலிக் கடற்பரப்பில் பிரயாணம் செய்தது அப்பாவிப் பொதுமக்கள் என அறிந்திருந்தும் கடற்படையினர் வெறியாட்டம் ஆடி சுட்டும், வெட்டியும் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்களைப் படுகொலை செய்துள்ளனர். இது அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலாகும்.

ஆதலால் பூநகரிப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமை அகற்றி எமது மக்கள் சுதந்திரமாகப் பிரயாணம் செய்ய பூநகரி - சங்குப்பிட்டி கடல் மார்க்கமான பாதையை போக்குவரத்திற்காகத் திறந்துவிட்டு, பாதிப்புக்குள்ளான எமது மக்களின் துன்பங்களை நீக்குமாறு வேண்டுகிறோம்.

இன்று யாழ் குடாவில் தினம்தினம் இராணுவ நடவடிக்கைகள் என்ற போர்வையில் முப்படைகளின் அட்டூழியங்கள் அதிகரித்துள்ளன. மக்கள் செறிந்து வாழ்கின்ற குடியிருப்புக்களை நோக்கி எறிகணைத் தாக்குதல், குண்டு வீச்சு விமானத்திலிருந்து குண்டுகளைப் போடுதல், கடற்படையினனரின் பீரங்கித் தாக்குதல் தொடர்கின்றன.

இராணுவ அட்டூழியங்கள், இராணுவ ஆக்கிரமிப்பு காரணமாக எண்பத்திரண்டாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த நான்கு இலட்சத்து மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாகியுள்ளனர். இவர்களுக்குத் தேவையான கல்வி, சுகாதாரம், வதிவிடம், தொழில் வாய்ப்புக்கள் எதுவும் ஏற்படுத்திக் கொடுக்காத நிலையில் மனோநிலை பாதிக்கப்பட்டு விரக்தியடைந்துள்ளனர். இவர்கள் மனிதாபிமான ரீதியில் கவனிக்கப்பட வேண்டியவர்கள் என்பது கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

உயர்ந்த நாகரிகமுள்ள மனித சமுதாயத்தின் முன்னால் சொந்த நாட்டு மக்களுக்கு எதிராக இப்படியானதொரு கொடூரமான இராணுவ அனர்த்தங்களையும், ஆட்சியாளர்களின் அடக்குமுறைகளையும் கட்டவிழ்த்துவிடுவது மனிதாபிமானமற்ற, மிக மிக அநாகரிகமான



செயலாகும். பல்வேறு பாதிப்புக்குளாகியிருக்கும் மக்கள் தற்போது அமைதி, சமாதானம் என்பவற்றை வேண்டி நிற்கின்றனர்.

பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான உபகரணங்கள், வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படாததால் கல்வி நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. தென் இலங்கையில் நவீன கம்பியூட்டர் முறையிலான தொலைக் காட்சிக் கல்வி புகுத்தப்பட்டுள்ளது. ஆனால் இங்கு குறைந்தளவிலான உபகரணங்கள் கூடக் கிடைக்கவில்லை. யாழ் பல்கலைக் கழக கல்வி மேம்பாட்டுக்கான வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனங்கள் கொடுத்த உபகரணங்களை எடுத்து வருவதற்கு கூட்டுப்படைத் தலைமையகம் மறுத்துவிட்டது. இதன் மூலம் எமது மாணவர்களின் கல்வி திட்டமிட்டுப் பாழடிக்கப்படுகின்றது.

மருத்துவ வசதியி
மையாலும் சீறுவர்
களின் உயிரிழப்புச்
றன.

முப்படைத் தாக்குத
திக்கு தேவையா
விளைபொருட்களை
தவர்களும், இடம்
வீட்டை செய்யபன்
பொருட்கள் இல்லா
கின்றனர். ஆதலா
கல்வி, சுகாதார
தேவையான உபக
ளையும் எவ்வித
அனுப்பி வைத்து
வீடற்று இருக்கும்
வழங்குவது தங்களி

எனவே மாண்புமி
பின்வரும் ஐந்து
வேற்றி வைக்கும
றோம்.

## கோரிக்கைக

1. தமிழ் மக்கள்
இராணுவ அழுத்த
தடைகளையும் நீ
பொருட்களை அ
மாவட்டங்களில்
விலைக்கே கிடை

2. யாழ் குடா ம
தேவைகளைப் பூ
களுக்குச் செல்வ
மார்க்கமான பே
துண்டிக்கப்பட்டுள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ‘யுத்தத்தை உடனே நிறுத்தி பேச்சு மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள்’

## ■ ஜனாதிபதிக்கு வட-கிழக்கு ஆசிரியர்கள் கூட்டாக மகஜர்

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் 1990 ஆம் ஆண்டு யூன் மாதம் தொடங்கி இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தத்தை உடனே நிறுத்தி இனப்பிரச்சினைக்கு சுயநிர்ணய அடிப்படையில் பேச்சுவார்த்தை மூலம் நிரந்திரத்தீர்வு காணுங்கள் என்று கோரும் மகஜர் ஒன்றை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் மூலம் வட-கிழக்கிலுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், அதிபர்கள் கையொப்பமிட்டு ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

”இரண்டரை வருடகாலமாக நீடித்துக் கொண்டிருக்கும் இந்த யுத்தத்தினால் அமைதியான சமாதான வாழ்க்கையை இழந்த நிலையிலும், அடிப்படை வசதிகள், உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலும் சேவை செய்து கொண்டிருக்கும் அதிபர், ஆசிரியர்களுக்கு வழங்கப்படாதிருக்கும் பின்வரும் கொடுப்பனவுகளை வழங்குவதன் மூலம் யுத்தத்தினால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சுமையின் ஒரு பகுதியையேனும் குறைக்க ஆவன செய்துதவுங்கள்.

பொது நிர்வாக அமைச்சின் 1990-10-12 ஆம் திகதி சுற்று நிருபம் 42.90 இன் அடிப்படையிலான ஆபத்துக்கால ஊக்குவிப்பு கொடுப்பனவையும் மிகக் கஸ்டப் பாடசாலைகளுக்கான அலவன்ஸ்ஸாக 15% வேதனம். (யூன் 1990 இல் இருந்து இ. போ. ச. புகையிரத, தபால் தொலைபேசி சேவைகள் இங்கு இல்லாத காரணத்தால்)

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல பாடசாலைகளையும் மிகக் கஸ்டப் பாடசாலைகளாகப் பிரகடனப்படுத்தி அதற்கான அலவன்ஸ்சாக 15% வேதனத்தை 1990 யூனிலிருந்து வழங்குங்கள்.

நிர்வாகம் மறுசீரமைக்கப்படும் போது பிரிவுச் செயலகங்களின் கீழ் கல்வி நிர்வாகம் கொண்டு வரப்படுவது கல்வி அபிவிருத்தியை பாதிப்பதோடு, கல்வி நிர்வாகச் சேவை, அதிபர் சேவை, ஆசிரியர் சேவைகளில் உள்ளவர்களின் அந்தஸ்தை வெகுவாகப் பாதிப்புக்குள்ளாகுமாதலால் முழுமையான தனித்துவமான பிரிவுக் கல்விச் செயலகங்களை உருவாக்குங்கள்.”

...மையாலும் போசாக்கின் ..., கர்ப்பிணித் தாய்மார் ...ள் அதிகரித்து வருகின்

...ளினால் உணவு உற்பத் ... உபகரணங்களையும், ... வீடுகளையும் இழந் ...யர்ந்தவர்களும் தங்கள் ...டு குடியிருக்க கட்டப் ... மிகவும் கஸ்டம் அடை ... உணவு, உறைவிடம், ...ருத்துவம் இவற்றிற்கு ...ங்களையும் பொருட்க ... தட்டுப்பாடும் இன்றி ...வி அற்று, நோயுற்று, ... மக்களுக்கு நிவாரணம் ... பெரும் கடமையாகும்.









... ஜனாதிபதி அவர்களே ...ாரிக்கைகளையும் நிறை ... பணிவுடன் வேண்டுகி

...ீது திணிக்கப்பட்டுவ்ரும் ...ளையும், பொருளாதாரத் ... அத்தியாவசிய உணவுப் ...பி வைத்து ஏனைய பிற ...ற்பனை செய்யப்படும் ...் செய்ய வேண்டும்.

...ள் தங்கள் அத்தியாவசிய ... செய்ய பிற மாவட்டங் ...ான சகல கடல், தரை ...தவரத்துப் பாதைகளும் ... ஆதலால் பூநகரிப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாம்களை அகற்றி மனிதாபிமான ரீதியில் கடல் மார்க்கமான பூநகரி -சங்குப்பிட்டிப் பாதையை போக்குவரத்திற்காக திறந்து விட வேண்டும்.

3. தமிழ் மக்களுக்கு எதிரான பாரிய இராணுவ அழுத்தங்கள் கருத்தற்ற யுத்தத்தை உடனடியாக நிறுத்தி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

4. சாதரண ஒரு தனி மனிதனுக்கு கிடைக்க வேண்டிய அடிப்படை வசதிகளான உணவு, உறைவிடம், கல்வி, சுகாதார, மருத்துவம் போன்ற அத்தியாவசிய தேவைகளுக்கான பொருள்களை எவ்வித கட்டுப்பாடும் இல்லாமல் அனுப்பி வைக்க வேண்டும்.

5. அப்பாவிப் பொது மக்களை சுட்டும், வெட்டியும், குண்டு வீசியும் படுகொலை செய்யும் இராணுவ அட்டூழியங்களை நிறுத்த வேண்டும். ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






பெயருக்கு இலக்கணமாய் வாழ்ந்தவர்களில் செங்கோலும் இணைந்து கொண்டான். நட்பிலும் இவன் செங்கோல் தவறியதில்லை. கடமையில், கட்டுப்பாட்டில், மனித நேயத்தில், தமிழர் பண்பாட்டில் நடுநிலை தவறாது 'செங்கோல்' என்ற தனது பெயரைக் காப்பாற்றிய ஒரு காவியம் இன்று எங்களுடன் இல்லை.

மணலாற்றின் கள வரலாற்றில் இவனது நிதிப்பணியை நினைத்துப் பார்க்கிறேன். - .... நிதிப் பொறுப்பாளனாய், தோளில் பணப்பையைத் தொங்க விட்டபடி ஓடி ஓடிக் கடமையைச் சரிவரச் செய்த நாட்கள் தான் எத்தனை. ? நிதி இருக்குமிடத்தில் நீதியிருப்பதில்லை. நீதியிருக்குமிடத்தில் நிதியிருப்பதில்லை. ஆனால் செங்கோலிடம் நிதியும், நீதியும் இணைந்திருந்தன.

செங்கோலுக்கு என்றும் கண்கள் இரத்தம் போல் சிவந்திருக்கும். அவன் கண்கள் ஏன் சிவந்து கிடந்தன என்பதை இப்போதுதான் சிந்தித்துப் பார்க்கிறேன். தூங்குவதற்கு இவனுக்கு நேரம் கிடைத்ததில்லை. நாம் படுக்கும் போது விளக்கும் கணக்குமாய் இருப்பதைப் பார்க்கிறோம். விழிக்கும் போதும் அதே மேசையில் .... அதே இருக்கையில் .... அவன் எப்போது தூங்குகின்றானென்பதை இறுதிவரை என்னால் கண்டுபிடிக்க முடிந்ததில்லை.

"கப்டன் சங்கிலி" ஓயாமல் வாகனமோட்டித் தியாகியாகிப் போனவனின் பெயர் தாங்கிய லொறிவண்டி. செங்கோலைத் தவிர மற்றவர்கள் அதனை ஓட்டுவது கடினமானது. சிங்கள அரசின் பொருளாதாரத் தடையை உணர்ந்து எங்கள் போராட்டத்தை வளர்க்கவேண்டுமென ஓடிய லொறி வண்டி அது. மணலாற்றுச் சண்டைக் களங்களுக்கெல்லாம் அந்த லொறி வண்டியில் தான் பொருள்களை ஏற்றி இறக்குவான் செங்கோல். பணத்தை அளவோடு செலவிட வேண்டுமென்பதற்காக, தானே சென்று கொள்வனவு செய்யும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டான். இயக்கத்தின் வளர்ச்சியை நெருக்கடியான காலத்தில் எவ்வாறு எடுத்துச் செல்ல வேண்டுமென்பதைச் சரியாகப் புரிந்து நிதிப்பணி புரிந்தான். சில நாட்களாக ஓடுவாரற்று நிற்கும் "கப்டன் சங்கிலி" லொறிவண்டியைப் பார்க்கும்போது நெஞ்சில் வேதனை முட்டிக்கொள்கிறது.

மணலாற்றில் நடக்கும் ஒவ்வொரு சண்டையிலும் களைப்புடன், பசியுடன் இருக்கும் எம் வீரர்கள், "செங்கோலண்ணனுடைய இடத்திற்குப் போய் வருவம் மச்சான்" என்று கூறிக்கொண்டு ஓடி வருவார்கள். செங்கோல் ஏதாவது நல்ல சாப்பாட்டுப் பொருள்களைக் குறைவின்றி வாங்கி வைத்திருப்பான். வயிறார, ஆசைதீரத் தன் தோழர்கள் சாப்பிடும்போது தனக்குள் மகிழ்வையும், நிறைவினையும் கண்டு கொண்டான். இன்றோ, நாளையோ மண்ணுக்காய் உதிரப்போகும் அவர்களை மகிழ வைப்பதையே தன் மகிழ்வாகக் கருதியவன், கண்மூடிக் கிடந்த போது அவன் முன்னே பேசுவதற்கு வார்த்தைகளின்றித் தலை குனிந்து நின்ற வீரர்களை நினைத்துப் பார்க்கும்போது....

செங்கோல் மக்களுடன் கொண்டிருந்த உறவு வித்தியாசமானது. அவன் யாருடைய வீட்டிற்கும் சென்றது கிடையாது. அப்படிச் செல்வதை அவன் விரும்பியதில்லை. விரும்பினாலும் நேரம் கிடைத்ததில்லை. ஆனால் செங்கோலைத் தெரியாதவர்களில்லை. அவன் மீது பற்றும் பாசமும் வைக்காதவர்களில்லை. மக்கள் மனம் நோகாமல் பேசிக் காரியத்தைக் சாதுரியமாக முடித்துக்கொள்வான். செங்கோலின் வீர உடல் கல்லறைக்குச் செல்லும் போது மக்கள் வாய்விட்டு அழுத போது நான் வியப்படைந்தேன். மரணத்தில்தான், மக்கள் அவன் மீது கொண்ட ஆழமான நேசத்தை அறிய முடிந்தது.

செங்கோல் புரிந்துணர்வுள்ள போராளி; அன்று ஊரியான் பாதையில் சேற்றில் கால் புதைய, சாரத்தை உயர்த்திச் சண்டிக்கட்டுக் கட்டிக் கொண்டு முக்கியமான பொருள்களைச் சுமந்து, சுமந்தே கரை சேர்த்ததை நினைத்துப் பார்க்கிறேன். ... சாவிற்கு முன் இவன் கிளாலிப் பாதையில் அனுபவித்த துன்பங்கள்...

கொடுத்த வேலை எதுவாக இருந்தாலும் சொல்லிலோ, செயலிலோ தளர்வு காட்டாதவன். அன்பான ஆனால் அளவான பேச்சு. அளவிற்கு மிஞ்சினால் கோபத்தில் கண்கள் சிவந்து விடும். உயர்ந்த தோற்றமும், சிவந்த கண்களும், அளவான அமைதியான பேச்சும் இவன் மீது மற்றவர்க்கு அச்சத்தை உண்டாக்கும். பழகி உள்ளம் புரிந்தோர்க்கு மரியாதையும், அன்பும் கொண்ட இவனின் தந்தை கூட ஒரு விசித்திரமான பிறவி.

1988 இல் தமிழீழ விடுதலைப் போருக்குக் கொள்ளி செருக முற்பட்ட தேச விரோதக் கும்பல்கள், செங்கோலின் அண்ணனை பளையில் வைத்துக் கண்டதுண்டமாக வெட்டிக் கொன்றனர். மகனை வெட்டிக் கொன்ற செயல் பொன்னுத்துரையின் இருதயத்தை வெடிக்கச்செய்தது. அந்த நாள்தான் செங்கோலின் விடுதலை வாழ்வுக்கு வழியமைக்கிறது. பொன்னுத்துரை தன் மக


மேஜர் செங்கோல்

னைத் தானே களத்துக்கு அனுப்பிவைக்கின்றார்.

மணலாற்றுக் காட்டில் பயிற்சி முடித்த செங்கோலின் திறமை அளவிடப்பட்டது. அதனால் பயிற்சி ஆசிரியனாக நியமிக்கப்பட்டான். தொடர்ச்சியாக மூன்று பயிற்சிப்பாசறைகளை நிறைவாக முடித்தான். கடமை வீரனாய் நின்ற செங்கோல், பொறுப்பாளர்களின் கருத்தில் நிறைந்தான். அதன் விளைவு அவனின் வளர்ச்சிப் படியானது. நிதிப் பொறுப்பு ஒப்படைக்கப்படுகிறது. சிக்கலும், பொறுப்பும் மிக்க இந்தப் பணியில் செங்கோலின் கோல் தளம்பலின்றி நின்றது.

செங்கோலின் நிதானமான வளர்ச்சி முல்லைத்தீவுக் கோட்டத்தின் சிறப்புப் பொறுப்பாளனாக அவனை உயர்த்தியது. பொறுப்பேற்று இரண்டு வாரம் இருக்கும்; எங்காவது பெருமளவு இராணுவத்தைக் கொல்ல வேண்டும், ஆயுதங்களை அள்ள வேண்டும் என்ற உணர்வு தலையெடுத்து நின்றது. சாதனை மிக்க வரலாறு எழுதப்படுவதற்கான நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. இந்த நாளின் அவன் தந்தையின் உணர்வுகளை அசைபோட்டுப் பார்க்கின்றேன்.

செங்கோலின் பிறந்த மண் இயக்கச்சிக் கிராமம். இன்று சிங்களப் படைகளின் ஆக்கிரமிப்புக்குள் விழுங்கப்பட்டுக் கிடக்கின்றது. பளையினை அண்டிய பகுதியில் அவனது தாய் தந்தையர் வாழ்கின்றனர். அண்மையில் யாழ்ப்பாணம் சென்றுவந்தபோது அவனது தந்தையைக் கண்டுகதைத்தேன்.

"செங்கோல் முன்பு போல இனி இங்கே வரமாட்டான்; அவனுக்குப் பொறுப்பு அதிகரிச்சிருக்கு" என்று கூறிய போது, "அவன் இஞ்சை வரவேண்டாம் தம்பி; அவன் விடுகிற பிழையளை வந்து நீங்கள் சொல்லுங்கோ. நான் வாறபோது அவனிடம் சொல்லி அவனைத் திருத்த உதவியாய் இருக்கும்" என்று சொன்னார். மீண்டும் அவரிடம் செல்லும் முன்... பிழைவிட்டால்தானே அவரிடம் சொல்ல வேண்டும். பிழையற்ற அவன் வீரத்தைச் சொல்ல விரைந்தபோது....

செங்கோலின் தாய் சாதாரணமானவளல்ல, தியாகத்தின் இருப்பிடம். செங்கோலின் வீரச்சாவை எப்படித் தெரிவிப்பது என்ற தயக்கத்தோடு வீட்டு வாசலுக்குள் நுழையும் போதே... "தம்பி! என்ரை பிள்ளையின்ரை வீரத்தை நான் அறிந்துவிட்டேன். என்ர பிள்ளை இயக்கத்திற்குச் செய்ததைவிட என்ர பிள்ளைக்கு இயக்கம் அதிகமாய் செய்திட்டுது" என்று கூறி நின்ற அவனது வீரத்தாயை நினைக்கின்றேன்....

செங்கோல் தன் வீர அத்தியாயத்தின் முடிவுவரிகளை எழுதிக் கொண்ட நாளை நினைத்துப் பார்க்கின்றேன் . தாக்குதலுக்கான வியூகங்கள் வகுக்கப்பட்டிருந்தன. நாடியில் கைஊன்றியபடி இருந்தான் செங்கோல். "என்ன மச்சான் யோசிக்கிறாய்; உன்ர பெடியளுக்குத் தாக்கும் முறைகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டிரு" என்று சொல்லியபோது சிரித்தவாறே எழுந்து சென்றான். அன்றிரவு முழுவதும் செங்கோல் தூங்கவில்லை. நிலைகளைச் சரிபார்ப்பதும், புத்திமதிகள் கூறுவதுமாய் இருந்தான்.

1992ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் 24ம் நாள் சூரியனின் பகல் கொடுமை தணிந்து கொண்டிருந்தது. 4. 30 மணியிருக்கும் இராணுவத்தினர் முகாமிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தனர். இன்னும் சில நிமிடங்களில் செங்கோலின் அணி தாக்குதலை தொடங்கும் அபாய அமைதி. செங்கோலின் குரல் வோக்கி டோக்கியில் ஒலித்துக் கொண்டிருந்தது. சில கணங்கள்... சண்டை தொடங்கி விட்டது. கம்பீரமாய் ஒலித்துக் கொண்டிருந்த செங்கோலின் குரல்?... நின்று விட்டது. நாற்பதுக்கும் மேற்பட்ட இராணுவத்தைக் கொன்று ஆயுதங்களை அள்ளிய வீர இறுமாப்புடன் கண்மூடிக் கிடந்தான் செங்கோல். செங்கோல் சரிந்துவிட்டது.....

செங்கோலுக்காய் எழுத என் பேனாவுக்கு வல்லமையில்லை. அது நின்று கொள்கிறது. மை முடிந்ததாலல்ல; மீண்டும் மீண்டும் என் சிந்தனை கனப்பதால் .... எழுத்துக்கள் நனைகின்றன. மழையாலல்ல;பொங்கிய கண்ணீரால்.... ■

**- பாண்டியன்**

## நீ அமைதியாக....

இப்பெல்லாம் அவனுக்கு என்னில அன்பில்லை'. நினைக்க அழுகை வந்தது, அழுதான்; விம்மிவிம்மி அழுதான்.

மாலை நேரம், அண்ணனைத் தூக்கினார்கள். அம்மா பெரிதாகக் குரல் வைத்து அழுதாள். நெஞ்சில் அடித்தடித்து அழுதாள். முடிவாகச் சரிந்து விழுந்தாள்.

வெளியில் வந்தவர்கள், முன்னால் உறங்கிக் கொண்டிருந்த அண்ணாக்களின் வரிசையின் பின்பாக அதோ தெரிகின்றதே அந்த இடத்தில். அண்ணனை புதைகுழிக்குள் இறக்கினார்கள்.

இவன் எட்டிப் பார்த்தான். சிரித்தபடி அண்ணா உறங்கிக் கொண்டிருந்தான். 'ஆனால், அண்ணா வீடு இருக்கக் கூடியதாக ஏன் இங்க வந்து படுக்கிறான்'?

கேள்விகளுக்குப் பதில் இருக்கவில்லை. அம்மாவும் கேட்கக் கூடிய நிலையில் இல்லை. கேட்ட பொழுதெல்லாம் அழுதாள். விளங்காத மாதிரி ஏதோ சொன்னாள். 'அம்மாவுக்குப் பதில் சொலலத் தெரிவதில்லை. அண்ணனிட்டத்தான் கேட்க வேண்டும். அவன் எப்போதாவது ஒருநாள் எழும்பி வருவான்.'

நாட்கள் சென்றன. அம்மா இயல்புக்கு வந்து விட்டாள். எல்லாம் வழமையானது. ஆனால் அண்ணன் மட்டும் ஒருநாளும் எழும்பி வரவில்லை. இப்போதெல்லாம் காலதர் மூடியிருந்தால் அவனுக்குத் தூக்கம் வருவதில்லை. திறந்தால்.... முன்பாக கல்லறைகளைத் தடவி வரும் தென்றலின் தடவுகை, அவனை உறக்கத்திற்கு அழைத்துச் செல்லும்.

'அண்ணனைக் கூப்பிடக் கூடாது அவன் பாவம் நித்திரை கொள்ளுகிறான்' என்று, அம்மா சொல்லியிருந்தாள்.

அம்மா இல்லாத சில நேரங்களில் காலதரால் எட்டிப் பார்ப்பான். அண்ணனைக் கூப்பிட வேண்டும் போலிருக்கும்; ஆனாலும் ஒருநாளும் கூப்பிடவில்லை.

'அண்ணா ஏன் இப்பிடி... என்னட்டக் கூட வராம.... நெடுகவும் படுத்துக் கொண்டு... அண்ணனிட்டையே கேட்க வேண்டும். பக்கத்தில் போட்டா அவன் சொல்லுவான்.'

'இன்றைக்கு எப்படியும் அண்ணனடிக்குப் போக வேணும்.'

அம்மா பின் கட்டில். வெளியில் வந்தான். சந்தேகம் தட்டியது. 'அம்மா வேலையை முடித்து விடுவாளா.....?'

பின்னுக்குப் போனான். மெல்லிய விளக்கொளியில் அம்மா. கழுத்தைக் கட்டி அணைத்தான். உரசினான்.

"விடப்பன்.... வேலை இருக்கு....."

எட்டிப் பார்த்தான். நிறையப் பாரங்கள் கிடந்தன. விட்டிட்டு மெதுவாக முன்னால் வந்தான். நிலவு வெளிச்சம் போட்டது.

படலையைத் திறந்தான். வீதியைக் கடந்தான். இரும்புக் கம்பிக் கதவு மறித்தது. உள்ளே பார்த்தான்.

வெண் படிமங்கள் போல் கல்லறைகள். நிலவு கல்லறைகளைத் தொட்டுத் தடவித் தாலாட்டியது.

தொடர்ச்சி 4ம் பக்கம் ....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நீ அமைதியாக உறங்க...

சிறு கதை

வியர்த்தது, காலதரை நெட்டித் திறந்தான். நிலவு அறைக்குள் விழுந்தது.

கம்பியில் பிடித்து விளிம்பில் கால் வைத்து எட்டிப் பார்த்தான். சாய்ந்து கிடந்த வேலிக்கு மேலாக அந்த வெளி தெரிந்தது. இருட்டில் பார்த்தால் எதுவுமே தெரியாது. நெஞ்சத்தை ஏதோவொன்று அழுத்தும். ஆனால் நிலவில் இனிமைதான்.

எங்கும் வெண்ணிறப் படிமங்கள். மரங்களின் நிழல்கள் மறைக்க முயன்றன; முடியவில்லை.

நாலாவது வரிசையில் கடைசியா.... இடம் அடையாளம் தெரிந்தது. அங்குதான் அவனின் அண்ணன் உறங்குகின்றான்.

பின்பக்கம் சத்தம் கேட்டது. 'சமையற்கட்டை விட்டு அம்மா இப்போதைக்கு வரமாட்டாள். இண்டைக்கெண்டாலும் அண்ணனிட்ட போவேணும்.' மனம் குறுகுறுத்தது.

சே.... அண்ணா எவ்வளவு இனிமையானவன்...

அப்போதெல்லாம் வீட்டுக்கு முன்னுக்கு வெறும் பற்றைக்காடுதான். வளர்ந்து, உயரமாக, பார்க்கவே பயமாக இருக்கும். படலையைத் திறந்து வெளியில் வந்தால், அம்மா பின்னாடியே வருவாள்; பேசுவாள். 'அம்மா ஏன் இப்படிக் கத்துகிறாள்' என மனது சலிக்கும்.

"ஏனம்மா.....?"

"பத்தேக்கை பேயள் பிசாசுகள் இருக்கு, உன்னை வந்து பிடிச்சுக் கொண்டு போயிடுங்கள்."

இரவில் படுக்கும்பொழுது பயமாக இருக்கும். ஏதோ நெஞ்சை அழுத்துவது மாதிரி... காலதரை மூடுவது நல்லதாகப்படும், ஆனால் எழும்பப் பயமாக இருக்கும்.

கண்களை மூடினால் பேய்களும் பிசாசுகளும்.... கறுத்த பற்கள் - நீண்ட -தலைவிரித்த... பிசாசுகள் கைகளை அகல விரித்து இவனைப் பிடிக்க வருங்கள்.

ஓடுவான். பாம்புகள் பூச்சிகள் முட்கள்... பயந்து நடுங்கியபடி நிற்பான். அகலவிரித்த கைகளுடன் பேய்கள் இவனை நெருங்குங்கள். அண்ணன் வருவான்; கையில் வாளியிருக்கும். கைகளை ஓங்கி விசுக்குவான்.

பேய்களும் பிசாசுகளும் ஓடும். பாம்புகளும் பூச்சிகளும் செத்தழியும். அண்ணன் இவனைத் தூக்கி அணைப்பான். 'அவன் எப்போதும் வீரன்தான்.'

திடீரென ஒருநாள் வீட்டுக்கு முன்னால் வீதியில் பலர் குழுமினர். அன்றும் மறுநாளும் ஒரே வேலை. அம்மாவும், அண்ணனும் அங்குமிங்கும் ஓடித் திரிந்தார்கள். மூன்றாவது நாள் காலையில் அந்தப் பற்றைக்காடு முற்றாக இல்லாமல் போனது.

நிம்மதியாக இருந்தது. படலையைத் திறந்து முன்னுக்கு வரக்கூடியதாக இருந்தது. அம்மா முன்னர் போல் பின்னால் வருவதில்லை.

நாட்கள் சில சென்றன. வெயில் சாயும் மாலை நேரம். மக்கள் கூடினர். மாமாக்கள், அண்ணாக்கள். கைகளில் துப்பாக்கிகள்... இவன் கண்களை அகலத் திறந்தபடி இருந்தான். அண்ணன் அருகில் நின்றான். அம்மா படலையுடன் ஒட்டிய படி வேர்த்து விறுவிறுக்க நின்றாள். இன்னும் சில நிமிடங்களில் அழத் தொடங்குவாள்.

புதைகுழிக்குள் பெட்டி ஒன்றை இறக்கினார்கள். அண்ணன் ஓடினான். அம்மாவும் போனாள். அம்மாவை ஒட்டியபடி நடந்தான். கிட்டவாகப் போனதும் எட்டிப் பார்த்தான்.

அண்ணனொருவன் உறக்கத்தில்.... சுற்றி நின்ற மாமாக்களின் -அண்ணாக்களின் துப்பாக்கிகள் வானத்தைப் பார்த்தன. முழங்கி ஓய்ந்தன. அம்மா அவனை இழுத்தணைத்தாள். திரும்பி நடந்தாள்.

இரவு, அவனுக்கு உறக்கம் வரவில்லை. "அம்மா, அந்த அண்ணைக்கு என்ன நடந்தது?"

"அந்த அண்ணை நித்திரை கொள்ளுறான்".

"ஏன் அவனுக்கு வீடில்லையா"?

"இல்லை. அவனுக்கு அதுதான் வீடு. இந்த மண்ணும் காற்றும் நீயும் தான் சொந்தம்".

அவனுக்கு விளங்கவில்லை. உறக்கமும் வரவில்லை. இரவு நீண்டது. 'பாவம் அவன் பேய்களுக்கும் பிசாசுகளுக்கும் நடுவில் என்ன செய்யப் போகிறானோ'?

நாட்கள் சென்றன. அண்ணாக்களில் பலர், அங்கு உறக்கத்தில்... ஒவ்வொரு முறையும் அம்மா அழுதாள். அண்ணா கலகலப்பை மறந்து இறுகிப் போவான். இவனோ உறங்க மாட்டான், தவிப்பான். ஒரு அம்மாவிடம் கேட்டான்,

"அந்த அண்ணாக்களை பேய் பிசாசுகள் ஒண்டும் செய்யாதா? "அம்மா சிரித்தாள். அவனைக் கட்டி அணைத்தாள்.

"அண்ணாக்களைக் கண்டா பேய் பிசாசுகள் பயத்தில் ஓடிடும்; அவங்கள் விரட்டிப் போடுவாங்கள்".

அவனுக்கு அமைதியாக இருந்தது; மகிழ்ச்சியாகவும் இருந்தது. சில நாட்களில் அண்ணன் வீட்டை விட்டுப் போய் விட்டான்.

அம்மா அதனை எப்படி ஏற்றுக் கொண்டாளோ தெரியவில்லை, ஆனால் அவன் சோர்ந்து போனான். அவனுக்கு அண்ணனின் அரவணைப்புத் தேவைப்பட்டது. அம்மாவிடம் கேட்டான்.

"அண்ணன் எங்க போட்டான்"?
"இயக்கத்திக்கு"
"ஏன்"?
"போராட"

அவனுக்கு விளங்கவில்லை. 'அம்மா இப்படித்தான். சரியாகப் பதில் சொல்லத் தெரிவதில்லை. அண்ணன் வரக் கேட்க வேண்டும்.'

இப்போதெல்லாம் அவன்தான் வாசலில் அம்மாவுடன் நின்றான். புதைகுழிக்குள் அண்ணாக்களை இறக்கும் பொழுது ஓடிச் சென்றான். அம்மா முன்னைவிட அதிகமாக அழுதாள். பார்ப்பதற்காகப் பரிதவித்தாள். வர வர அம்மாவின் போக்கு அவனுக்குப் பிடிக்கவில்லை. 'நிம்மதியாக உறங்குவதற்காக யாரும் அழுவார்களா....?'



'உனக்காக..... நீ சிரிக்க .... வளர....
சுதந்திரமா ஓடி ஆட .... அமைதியா உறங்க....'

அமைதியான காலை நேரம், படலை திறந்து சத்தம் கேட்டது. அண்ணன் வந்தான். அவன் ஓடிச் சென்றான். கைகளைப் பிடித்து இடுப்பில் கால்களை வைத்து தோளுக்குத் தாவினான்.

அன்று முழுவதும் மகிழ்ச்சிதான். மகிழ்ச்சிப் பிரவாகம். அன்றுதான் அவர்கள் இருவரும் தனியாக இருக்கும் பொழுது அவன் கேட்டான்.
"ஏன் அண்ணா எங்களை விட்டுப் போனனி....."?

"உனக்காகத்தான்". அவன் கன்னத்தைக் கிள்ளினான். விளங்கவில்லை.

"எனக்காக எண்டா....."?

அண்ணன் அவனைத் தூக்கி அணைத்தான்; முத்தமிட்டான்.

"நீ சிரிக்க..... வளர..... சுதந்திரமா ஓடியாட.... அமைதியா உறங்க...."

அவனுக்கு விளங்கிய மாதிரியும் இருந்தது; விளங்காத மாதிரியும் இருந்தது. கேள்விகளை விட்டு விலகினான். அண்ணனின் தோளில் தொங்கிய துப்பாக்கியில் கண்கள் ஏக்கத்துடன் விழுந்தன. மெதுவாகத் தொட்டான்.

"இது என்னட்ட இருந்தா நானும் சுடுவன்"

அண்ணன் துப்பாக்கியை கையில் எடுத்தான்; அவனின் கண்களை நன்றாக உற்றுப் பார்த்தான்.

"உனக்காக இது காத்துக் கொண்டு தான் இருக்கும்"

அன்று இரவும் கனவில் பேய்களும் பிசாசுகளும் வந்தன. ஆனால் அண்ணாக்கு அருகில் ஏராளமான அண்ணாக்கள் வாள்களுடன் நின்றார்கள். பேய்கள் ஓடின. விழுந்தடித்து ஓடின. செத்தழிந்தன. கனவிலும் மகிழ்ச்சிதான்.

மறுநாள் அண்ணன் சென்றான். அதன்பின் நீண்ட நாட்களாக வரவில்லை. அவனுக்கு அண்ணனைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. இதயம் தவித்தது. இடையிடை காய்ச்சலும் வந்தது.

தொடர்ச்சி 10ம் பக்கம் ....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடியலைக் காணும் நாள்

**– கேணல் கிட்டு**

உண்மையில் மிக இளம் பிராயத்தவர்களையும், குறிப்பாகப் படிப்பையும் நாம் மிகவும் கவனத்திற் கொள்ள வேண்டும். விஞ்ஞான முன்னேற்றம் அடைந்த நாடுகளில் நாட்டின் பாதுகாப்புக்கு ஒதுக்கப்படும் நிதியளவுக்கு, குழந்தைகளின் பராமரிப்புக்கு, கல்வி போன்றவற்றிற்கு ஒதுக்கப்படுகின்றன. ஆனால் இன்றும் கூட நம் நாட்டில் குழந்தைகளின் கல்வி ஒரு அமைப்பு ரீதியாக ஒழுங்குபடுத்தப்படவில்லை. குழந்தைகளைச் சரியாக வழிநடத்துவதன் மூலமே நாம் ஒரு எழுச்சிமிக்க எதிர்கால சந்ததியினரை உருவாக்க முடியும். இன்று யாழ்ப்பாணத்தில் கூட பாலர் பாடசாலைகள் எந்த ஒரு வரைமுறைக்கும் உட்பட்டதாக இல்லை. இப்பாடசாலைகள் எல்லாமே பயிற்சிபெற்ற ஆசிரியர்களாலோ, எந்த ஒரு அமைப்பினூடாகவோ செயற்படுத்தப்படவில்லை. பதிலாக, ஆங்காங்கே எந்தவித பயிற்சியுமில்லாதவர்களினால் பாலர் பாடசாலைகள் நடத்தப்படுகின்றன.

இவை தவிர்க்கப்பட்டு பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு மிக நவீன முறையில் பயிற்சிகள் கொடுக்கப்பட வேண்டும். இதைவிடவும் அனைத்துப் பாலர் பாடசாலைகளும் ஒரே கட்டுப்பாட்டிலும், ஒரே நெறிமுறையிலும், ஒரே அமைப்பின் கீழ் இயங்கச் செய்ய வேண்டும். ஏனென்றால், குழந்தைப் பிராயத்திலேயே குழந்தைகளின் மனநிலையை உளவியல் ரீதியாக நன்றாகத் திட்டமிட்டு வளர்ப்பதுதான் எமக்குச் சிறப்பான எதிர்காலச் சந்ததியினரை அமைத்துக் கொடுக்கும். கடந்த காலங்களில் இராணுவ நெருக்கடியால் ஏற்பட்டிருக்கும் பாதிப்பு சொல்ல முடியாதது. தினம் தினம் குண்டுவீச்சு விமானங்களின் தாக்குதல்களுக்கும், இராணுவ முகாம்களிலிருந்து ஏவப்படும் குண்டுகளுக்கும் இவ் வாழ்க்கையே பழக்கப்பட்டுப்போன எம்மையே பாதிக்கும் போது, குழந்தைகளின் மனநிலைப் பாதிப்பைக் கூறவும் வேண்டுமா? நான் ஒருமுறை எனக்குப் பழக்கமான டாக்டரிடம் உரையாடிக் கொண்டிருக்கையில், தன்னிடம் ஒரு முதியவர் வைத்தியத்திற்காக வந்ததாகவும், அவருடைய நோய் விசித்திரமாகதாகவும் தீர்க்க முடியாததாகவும் இருந்ததாகக் கூறினார். அதாவது அந்த வயோதிபர் தானிருக்கும் இடத்திற்கு மேலாக இராணுவக் கெலிகொப்டர் விமானம் பறக்கும் பொழுது தன்னையும் அறியாமல் சிறுநீர் கழித்து விடுவதாகக் கூறினார். இப்படித்தான் எமது சமுதாயம் உளவியல் ரீதியாகக் கூட மிகவும் பாதிப்படைந்து வருகின்றது. உலக அனுபவம் வாய்ந்த முதியவரே இப்படி நிலைக்கு ஆளாகியிருக்கும் பொது, குழந்தைகளின் மனநிலைப் பாதிப்பு எவ்வளவு அதிகமாக இருக்கும்? நான் கூறவது அனைத்தும் உளவியல் ரீதியான பாதிப்புக்களைத்தான். நேரடியான தாக்கம் ஊரறிந்த விடயம்.

ஆகாயத்தில் குண்டுவீச்சு விமானங்கள் தோன்றும் பொழுது, அதை முதலில் கண்டவரிடமிருந்து எழும்பும் 'பொம்பர்' என்ற எச்சரிக்கைக் குரல் சனங்களின் காதுகளில் புகுந்தவுடன் அவர்களின் முகங்களில் தெரியும் பயப்பீதி, மரணபயம், பதட்டம், அவதி இவற்றையெல்லாம் பார்த்து தம்மையும் அறியாமல் அலறும் குழந்தைகளின் ஓலக்குரல் செவியை அடைத்து விடும். இப்படியாக உளவியல் ரீதியாக பாதிப்படைந்த குழந்தைகளுக்கு சிறிதளவேனும் நிவர்த்தி கொடுக்க வேண்டும் என்பதற்காக பல பகுதிகளில் சிறுவர் பூங்காக்களை நிறுவி வருகின்றோம். அதைவிட யாழ்ப்பாணத்தில் நல்லூர்க்கந்தசாமி கோவிலுக்கு அருகாமையில் கந்தர்மடம் என்னும் இடத்தில் சரணாலயம் ஒன்று நிறுவியுள்ளோம். சரணாலயம் என்ற பெயர் இருந்தாலும் உண்மையில் அது ஒரு சிறிய மிருகக்காட்சிச்சாலை போன்றே உள்ளது. இப்படியான முயற்சிகளினால் சிறுவர்களினதும், குழந்தைகளினதும் மனிநிலையைத் திடமாக்க முயலுவோம். எந்தவிதமான பொழுதுபோக்கு வசதிகளும் இல்லாமல் மிகப் பெரிய இராணுவ அழுத்தத்தின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கும் குழந்தைகளை உளவியல் ரீதியாக பாதிப்படையாமல் வழிநடத்த வேண்டும்.



**('குழந்தைகள் வளர்ப்பு' பற்றி 'கேணல் கிட்டு' அவர்கள் 1989ம் ஆண்டு தமிழக 'தேவி' இதழில் எழுதியதிலிருந்து.....)** ■

# 'எங்கட கிட்டு மாமா'

**– தேவர் அண்ணா**

"எங்கட கிட்டு மாமா செத்துப் போயிட்டார்"

எமது இயக்கத்தின் மூத்த தளபதி 'கேணல் கிட்டு' அவர்களது தியாக மரணச் செய்தி எமது மண்ணிலே பரவியபோது இரண்டரை வயது கூட நிரம்பியிராத சின்னஞ்சிறு குழந்தை ஒன்றின் செம்பவள வாயிலிருந்தும் உதிர்ந்த மழலைச் சொற்கள் தான் இவை.

"எங்கட வீட்டில் கிட்டு மாமா செத்துப் போயிட்டார்.... அவங்க வீட்டில கிட்டு மாமா சாகேல்லை அம்மா... அப்படியெண்டால் நாங்கள் அங்கை போய் கிட்டு மாமாவைப் பார்ப்பமே.....?" தங்கள் வீட்டில் தோரணங்கள் கட்டப்பட்டிருப்பதையும் பக்கத்து வீட்டில் இல்லாதிருப்பதையும் கண்டு அந்த மழலை தன் தாயிடம் இவ்வாறு கேட்டது.

**"நவீனரக ஆயுதங்களைப் பற்றி, போர் முனைகளைப் பற்றி, போராட்டத்திலே நவீன யுத்திகளைக் கையாளுவது பற்றி எதிரிகளை விழுத்துவது பற்றி மாத்திரம் அவர் சிந்திக்கவில்லை. இந்த மண்ணைப் பற்றி, இந்த மண்ணிலே வாழ்கின்ற மக்களைப்பற்றி போராட்டத்தின் உச்சக்கட்ட வேளையில் கூட பொது மக்களை அதன் தாக்கம் பாதிக்காத வகையில் செயலாற்ற வேண்டும் என்பது பற்றி....."**

"இல்லைக் குஞ்சு, அங்கையும் கிட்டுமாமா செத்துப் போயிட்டார். அங்கேயும் தோரணங்கள் கட்டுவினம்" தாயார் சின்னஞ்சிறு பிஞ்சிடம் கூறிய பதில் வார்த்தைகள் இவை.

எமது மூத்த தளபதி கிட்டு எமது தாயக மண்ணைவிட்டு பிரிந்த அந்தக் காலகட்டத்தில் இந்தச் சின்னஞ்சிறு மழலை அன்னையின் கர்ப்பப்பையில் கருவாகக் கூட உருவாகியிருக்கவில்லை. ஆனால் அந்தக் குட்டிப் பாப்பாவின் நெஞ்சத்தையும் கிட்டு மாமாவின் சாவு உலுப்பிவிட்டிருக்கின்றது.

சமாதானத் திட்டங்களோடு, அந்தத் திட்டங்களை பற்றி எமது தேசியத் தலைவரோடும், இயக்க உடன் பிறப்புகளோடும் கலந்து பேச, தமிழீழ மக்களுக்கு நல்லதொரு விடிவைத் தேடித்தர வேண்டும் என்று ஆவலோடு, தம்பிமாரோடு தமிழீழம் நோக்கிப் பயணம் வந்து கொண்டிருந்த போது பாரத அரசின் பாதகச் செயலினால் வீரச்சாவைத் தேடிக் கொண்டு விட்டார்கள் என்ற செய்தி இங்கு பரவியபோது தமிழீழமே சோகமயமானது.

பத்துமாதம் சுமந்து பெற்று, பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டி வளர்த்து விட்ட அன்னை, உடன் பிறப்பு, வாழ்வின் அனைத்து இன்பதுன்பங்களிலும் பங்கேற்பேன் என கிட்டுமாமாவைக் காதலித்துக் கரம்பற்றியவள், கிட்டுவோடு உண்டு உடுத்து உறவாடிய நண்பர்கள், இயக்க உடன் பிறப்புக்கள் அவரோடு பழகியவர்கள், பழகாதவர்கள், தெரிந்தவர்கள், அறிந்தவர்கள் அனைவரினது நெஞ்சஞ்களிலும் கிட்டுமாமாவின் பிரிவுச் செய்தி பெருநெருப்பை அள்ளிக் கொட்டியது.

கிட்டு என்கின்ற அந்த மூன்று எழுத்துக்குரிய மகத்துவத்தை தமிழீழத்தைச் சோக மயமாக்கிய அந்த மூன்று நாட்களும் இறுதி நாளன்று தீருவில் வெளியினிலே வெள்ளமென திரண்டிருந்த இலட்சக்கணக்கான மக்கள் கூட்டமும் எடுத்து விளக்கியது.

எமது தாயக மண்ணையும், தமிழீழ மக்களையும் கிட்டுமாமா எந்த அளவிற்கு நேசித்தார் என்பதனைச் சமீப காலத்தில் அவர் எழுதிய கடிதங்களிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது.

"நாம் எமது மக்களையும், மண்ணையும் (மண் என்பதும் மக்களையே குறிக்கும்) நேசிப்பதால் தான் போராடுகின்றோம். நாம் எமது சனத்தை நேசிக்க வேண்டும். அவர்கள் மீது அன்பு செலுத்த வேண்டும். இதுதான் எமது அடிப்படை இலட்சியம்.

சனங்களில் பல்வேறு வகைப்பட்டவர்களும் இருப்பார்கள். இவர்கள் எல்லோருக்குமாகவும்தான் நாம் போராடுகின்றோம், இரத்தம் சிந்துகின்றோம். அனைவரையும் ஒரே மாதிரியாக நேசிக்கும் பக்குவம் வளர்க்கப்படல் வேண்டும். ஒவ்வொரு போராளிக்கும் இது ஊட்டப்பட வேண்டும்.

எனக்கு ஒரு மண்ணும் ஒட்ட மாட்டேன் என்கிறது. எப்போதும் தமிழீழத்துக்கு ஓடிவர வேண்டும் என்ற நினைப்பும் எண்ணமுமே எழுகின்றது. ஒவ்வொரு கணமும் தாயகத்தின் சிந்தனைதான். வெளியாலே வாழும் போது தான் நாம் எமது மண்ணையும், மக்களையும் எவ்வளவு தூரம் நேசிக்கின்றோம் என்பது புரிகின்றது. தாய்மண் என்பதற்கான எத்தனையோ பரிமாணங்கள் புரிகின்றன. எமது தந்தையரும், தாய்மாரும் வியர்வை சிந்தி தமது மூச்சை விட்ட பூமி அது. அங்கே வீசும் காற்றில் எம்மூத்த சந்ததியின் மூச்சுக் கலந்திருக்கின்றது. எல்லாமுமாய்ச் சேர்ந்து அந்த மண் எம்மோடு ஒட்டிக்கொள்கின்றது.

தமிழீழத்துக்கு ஓடிவரும் நாட்களைத் தினமும் எண்ணிக் கொண்டே இருக்கின்றேன்"

தமிழீழ மண்ணிலே காலடி பதிக்க வேண்டும். இந்த மண்ணிலே மக்களோடு கலந்து நின்று அவர்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்ற உளத் துடிப்போடு பயணம் வந்த வேளை பாரதம் பாதகம் செய்து விட்டது.

"நானும் நீயும் கலியாணம் முடித்து, பிள்ளைகள் பெற்று, வளர்ப்பது மட்டும் வாழ்க்கையாக முடியாது. எமது வாழ்க்கைக்கு நாமேதான் அர்த்தத்தைத் தேட வேண்டும். நான் தேடிக் கொண்டிருக்கின்றேன். நீயும் தேட வேண்டும்."

"உன்னால எவ்வளவு முடியுமோ, அதற்கு மேலாக மற்றவர்களுக்கு உதவி செய். சேவை என்பது கடமைதான். கடமையிலிருந்து தவறாதே"

"நேர்மையாகவும் உண்மையாகவும் வாழப் பழக வேண்டும். நேர்மையாகப் பேசுதல், நேர்மையாக நடத்தல், இவ்விடயங்களில் எப்பொழுதும் கவனமாக இருக்க வேண்டும்."

"தினமும், சில வேளைகளில் திரும்பத் திரும்ப நல்ல விடயங்களையும் தத்துவங்களையும் படிக்க வேண்டும். வெறும் ஏட்டுச்சுரக்காய்களான தத்துவங்களை அல்லாமல் நல்ல மனிதர்களுடைய தத்துவங்களையும் படிக்க வேண்டும்."

"தினமும் தியானம் செய்து கொண்டுதான் இருக்கின்றேன். ஒரு புது ஆராய்ச்சி. ஆன்மீகத் துறையில் சமயங்களுக்கப்பால், சமயங்களைத் துறந்து, மக்களுக்கு ஆன்மீக வழிகாட்டலுக்கு வழிதேட வேண்டும். சமயங்களின் மாயப்பிடியிலிருந்து மக்களை விடுவித்து, சரியான மனோ சக்தியை சனங்களிடையே வளர்க்க வேண்டும்."

இந்த வாசகங்கள் எல்லாம் அமரர் கிட்டு அவர்கள் தனது மனைவிக்கு எழுதிய வாசகங்கள் மாத்திரமல்ல; எங்கள் எல்லோருக்குமாகவே சொல்லப்பட்ட வாசகங்களே அவை.

நவீனரக ஆயுதங்களைப் பற்றி, போர் முனைகளைப்பற்றி போராட்டத்திலே நவீன யுக்திகளைக் கையாளுவது பற்றி எதிரிகளை வீழ்த்துவது பற்றி மாத்திரம் அவர் சிந்திக்கவில்லை.

இந்த மண்ணைப்பற்றி, இந்த மண்ணிலே வாழ்கின்ற மக்களைப் பற்றி, போராட்டத்தின் உச்சக்கட்ட வேளையில் கூட பொதுமக்களை அதன் தாக்கம் பாதிக்காத வகையில் செயலாற்ற வேண்டும் என்பது பற்றி;

எதிரிப்படைகளின் நடவடிக்கைகளினால் தமது இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்து அகதிகளாகி அல்லல்படுகின்ற எம் உயிரிலும் இனிய தமிழீழ மக்களைப் பற்றி;

இந்த மண்ணின் வளங்களைப் பற்றி அந்த வளங்களை நாம் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது பற்றி;

நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற தாயக மீட்புப் போரிலே பொது மக்களின் பங்களிப்புப் பற்றி, அர்ப்பணிப்புகள் பற்றி, ஒத்துழைப்புகள் பற்றி, கிராமம் கிராமமாக நாம் சென்று மக்களோடு உறவாடி இயக்கத்தை வளர்க்க வேண்டும் என்பது பற்றி;

தமிழர்களின் கலை, பண்பாடு பற்றி, பாரம்பரிய கலை வடிவங்கள் பற்றி, ஒட்டுமொத்தமாகச் சொல்லப் போனால் அவர் சிந்திக்காத விடயங்களே இல்லை எனலாம். தனது சிந்தனைகளுக்குச் செயல்வடிவம் கொடுக்க வேண்டும், தான் கற்றுத் தெளிந்தவைகளை செயற்படுத்த வேண்டும் என பல்வேறு சிந்தனைகளோடு செயற்திட்டங்களோடு தாயகம் நோக்கி பயணம் வந்த வேளை பாரத அரசு பாதகம் செய்து எம்மிடமிருந்து பிரித்து விட்டது.

தாய், சகோதரம், மனைவி, உற்றார், உறவினர், சொந்தம், பந்தம், சொத்து பத்து, பட்டம் பதவிகள் அனைத்தையும் துறந்து, நீதியான ஒரு போராட்டத்துக்காக நியாயத்தின் பாற்பட்ட ஒரு போராட்டத்திற்காக, அடிப்படை மனித உரிமைகளையும் தமிழ்த் தேசிய உணர்வையும் பாதுகாப்பதற்காக கிட்டுமாமா உயிர் நீத்திருக்கின்றார்.

தொடர்ச்சி ஃம் பக்கம் ....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுதலை நெருப்பே!



திக்குகள் அதிர
தீயவர் ஒழிய
பசியோடு வயிறது
பற்றியெரிய

விசுவரூபமெடுத்த
விடுதலை நெருப்பே,

உந்தன்
அடிமுடி அறிந்து
அழிக்க முடியாமல்
பிரளயங்கள் அன்று
பின் வாங்கிச் சென்றன.

வெம்மையின் முன்னால்
வெற்றி கொள்ள முடியாமல்
வெறியர் படை
மிரண்டோடியது.

தேசத்தின் தாகமறிந்து
தீர்த்து வைத்த தியாகியே,
விடுதலைக்கு
மூச்சுக் கொடுத்தவளே,

காற்றுக்குள் உன்னை
காண்கிறது காலம்.
தண்ணீருக்குள் உன்னை
தழுவுகிறது தமிழ்.



உணவுக்குள் உன்னை
உணர்கிறது உரிமை.

அந்தோ.....!
அண்டங்களின் ஐம்புலன்களின்
அறிவுக்கப்பாலும்
நீண்டு நீண்டு செல்லும்
நினைவானாள் பூபதி.




# நினைவழியா நாட்களும் நெஞ்சில் மூண்ட நெருப்பும்

—புதுவை இரத்தினதுரை



அன்று;
எங்கும் இடிமுழங்கும்;
திக்கெங்கும் கூவிவரும்;
எதிரி கண்ணிலெல்லாம் [illegible]
எந்நாளும் இந்த பட்டம் இருக்காது.
[illegible]
கோயில் கொடியேற்றம் திருவிழா நடக்கும்;
[illegible]

[illegible]
"இரும்புப்பறவை" வட்டமிட்டு போகும்.
சீறிவரும் "ஷெல்கள்" போட்டு,
தீவிபத்தொன்று மீண்டும் போகும்.
எந்நாளும் எம்மை பயந்து நடுங்காது.
எங்கும் இன்னிசை நிகழ்ச்சி நடக்கும்;
"நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்;"
காற்றில் இந்தக் கானம் கலக்கும்;
காத்தவராயன் கூத்துத் தொடங்கும்.

எல்லோருக்கும் ஓரே ஒரு நம்பிக்கை.
"அவர்கள் விழித்திருப்பார்கள்."
நம்பிக்கை என்றும்
பொய்யாகிப் போகாது.
வாகனத்திலேறி புலிகள் விரைவர்,
"கிட்டு" தன்காரில்.....தெருவைக்கிழித்து.
களத்துக்குப் போவதைக் கண்டு மகிழ்வர்;
சற்று நேரத்தில் சத்தங்கள் ஓயும்;
மரக்கிளைகட்டி உருவம் மறைத்த
"50 கலிபர்" பூட்டிய "பிக்கப்,"
அங்கும் இங்கும் ஓடித்திரியும்.
"கிட்டு" அந்த "வானில்" நின்று,
தோள்கள் உதறச் சுடுவதைப் பார்க்கலாம்;
தோள்கள் உதறச் சுடுவதைப் பார்க்கலாம்;
குண்டுசுமந்து வந்துமிரட்டிய,
இயந்திரக் கழுகு எங்கோ மறையும்.

இன்று;
"50 கலிபர்" அழுகிறது
"கிட்டு" எங்கே? கிட்டு எங்கே?
[illegible] தோழன் எங்கே?
"இதோ இதோ திரும்பி வருவேன்" என்று
என்னிடம் சொல்லிப் போனவன் எங்கே?
[illegible] தாயகம் வருகையில்,
கடலில் மறித்த கைகளைக் காட்டு!

கப்பலின் மேல்தளத்தில்..
நெடிய பனைபோல நிமிர்ந்து நின்று,
கடைசிமணித்துளி என்னடா நினைத்தாய்?
கப்பல் தகர்ந்து கனல் மூண்ட போது,
என் தோழனே! என்னடா நினைத்தாய்?
தாயை நினைத்தாயா? தாரத்தை நினைத்தாயா?
தலைவன் முகத்தோடு,
தாயகத்தை நினைத்தாயா?

இதயமற்ற இரும்புச் சடங்களை,
[illegible] போது.
நெஞ்சில் உன்னைச் சுமந்த தாயகம்;
நெருப்பாய் திகழும் உனது தோழர்;
உலகத்திசைகளில் வாழும் நண்பர்,
உன்னை வளர்த்த உயர்ந்த தலைவன்,
எப்படிப் பொறுத்து இருந்திடக் கூடும்?
உனது நினைவை நெஞ்சில் சுமந்து,
எமது பயணம் இனியும் தொடரும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் வேண்டும்

சர்வதேசக் கடற்பரப்பு வழியே தமிழீழம் நோக்கி கேணல் கிட்டுவும் ஏனைய தோழர்களும் பிரயாணம் செய்துகொண்டிருந்த கப்பலை-சர்வதேச கடற்சட்டத்தையும் மீறி-தடுத்து நிறுத்தி, மரணப் பொறியொன்றை அமைத்து அவர்களைச் சாகடித்ததன் மூலம், மீண்டும் இந்திய அரசு ஈழத்தமிழர்களுக்குத் துரோகமிழைத்துவிட்டது.

இந்திய அரசு ஏன் இப்படி நடந்துகொண்டது?

புலிகள் இயக்கத்தை அழிக்க இந்திய அரசு ஏன் இவ்வளவு தீவிரமாக இருக்கின்றது?

இந்திய அரசின் பூகோள - தேசிய நலன்களும், அதன் பிராந்திய மேலாதிக்க வெறியும் தான் இதற்குக் காரணம்.

இலங்கைத் தீவில் 'தமிழீழம்'- என்ற தனிநாடு அமைவது தனது தேசிய -பிராந்திய நலன்களுக்குக் குந்தகமாக அமைந்துவிடும் என, இந்திய அரசு அஞ்சுகின்றது.

எனவேதான் தனியரசொன்றை அமைப்பதற்கான எமது விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதில், அது கண்ணும் கருத்துமாக இருக்கின்றது.

ஆயுதம் தாங்கிய இந்த தேச விடுதலைப் போராட்டத்தை தலைமை தாங்கி வழிநடாத்தும் புலிகள் இயக்கத்தை அழிப்பதன் மூலம், போராட்டத்தை ஒடுக்க அது கங்கணம் கட்டி நிற்கின்றது.

புலிகள் இயக்கத்தின் தலைமைப் பீடத்தை படிப்படியாக அழிப்பதன்மூலம், அதைச் சுலபமாகச் சாதித்துவிடலாம் எனத் தீர்மானித்துள்ளது.

இந்திய அரசின் இந்த நயவஞ்சகத் திட்டத்திற்கு இப்போது, எமது மூத்த தளபதியும், மத்திய குழு உறுப்பினருமாகிய கேணல் கிட்டுவும் பலியாகிவிட்டார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின்மூலம் ஈழத்தமிழர் மத்தியில் வளர்ந்துவரும் தமிழ்த்தேசிய எழுச்சியைக் கண்டு, இந்திய அரசு அஞ்சுகின்றது. இத்தமிழ்த் தேசியம் வளர்ந்து முதிர்ச்சி பெற்று தமிழீழத் தனியரசு அமையுமானால், அது தமிழ்நாட்டிலும் தன்னாட்சிக் கோரிக்கைக்கு புத்துயிர் அளித்துவிடுமென இந்திய அரசு பயப்படுகிறது. அத்துடன் இந்த தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றி, இந்திய உபகண்டத்தில் இருக்கும் தேசிய இனங்களின் மத்தியில் தேசிய இன எழுச்சிகளை உண்டுபண்ணி இந்திய சாம்ராஜ்யத்திற்கு ஆபத்தை உண்டாக்கி விடுமெனவும் இந்திய அரசு கலங்குகின்றது.

இவை ஒருபுறம் இருக்க, இலங்கைத் தீவில் ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் ஒரு அரசியல் உறுதிப்பாடு இருக்க வேண்டும் என்பதில் இந்திய அரசு மிகவும் அக்கறையாக இருந்தது. ஏனெனில் இலங்கைத் தீவில் அரசியல் உறுதிப்பாடு இல்லாவிடின் அதைச் சாட்டாக வைத்து இங்கே உலக வல்லரசுகள் தலையீடுகளைச் செய்யும் எனவும், அத்தலையீடுகள் இந்திய அரசின் பிராந்திய பூகோள நலன்களுக்கு அச்சுறுத்தலைக் கொடுக்கும் எனவும் இந்திய அரசு எண்ணியது.

இந்த அச்சத்தின் அடிப்படையில்தான் கடந்த பத்து வருடங்களாக, இந்திய அரசு, பல்வேறு பரிமாணங்களில் எமது விடுதலைப் போராட்டத்தில் தொடர்ச்சியாகத் தலையிட்டு வருகின்றது.

ஆனால் இந்திய அரசின் இந்த அச்சங்கள் உண்மைக்குப் புறம்பாக மிகைப்படுத்தப்பட்டவைகளாகும்.

இன்று உலகம் மாறிவிட்டது. பனிப்போர் முடிவுக்கு வந்து புதியதொரு அரசியல் ஒழுங்கும் பிறந்துவிட்டது. இப்புதிய உலக ஒழுங்கிற்கு அமைய இந்திய அரசும் தனது உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளில் தலைகீழ் மாற்றங்களைச் செய்துவிட்டது.

எந்த உலக வல்லரசுகள் இப்பிராந்தியத்தில் தலையீடு செய்துவிடும் என இந்திய அரசு பயந்ததோ அதே நாடுகளுடன் இன்று நெருங்கிய உறவுகளை அது ஏற்படுத்தியுள்ளது.

அந்த வல்லரசுகளுக்கே தனது உள்நாட்டுச் சந்தையையும் திறந்துவிட்டுள்ளது; அவற்றுடன் பொருளாதார உடன்படிக்கைகளையும் செய்துள்ளது; இராணுவ ஒத்திகைகளையும் நடத்திவருகிறது.

குறிப்பாக அமெரிக்காவும், இஸ்ரேலும் இன்று இந்திய அரசின் நட்புச் சக்திகளாகவே மாறிவிட்டன.

ஆனாலும் தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் சம்பந்தமான வெளிநாட்டுக் கொள்கையை மட்டும் இந்திய அரசு மாற்றவேயில்லை. மிகைப்படுத்தப்பட்ட அச்சங்கள் காரணமாகவும், நியாயமற்ற சந்தேகங்கள் காரணமாகவும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பகைமைக் கண்களுடனேயே, இந்திய அரசு இன்றும் பார்க்கின்றது. இது துரதிஸ்டவசமானது.

ஈழத்தமிழர்கள் நடாத்தும் தன்னாட்சிப் போர் தமிழ் நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற இந்திய அரசின்வாதம் யதார்த்தத்தற்குப் புறம்பானது.

ஒர்ஆயுதப் போராட்டத்தைப் பிறப்பிக்கச் செய்வதற்கு அதற்கே உரித்தான புறச்சூழல்கள் இருக்கவேண்டும். தமிழீழத்தின் புறச்சூழல் தமிழ்நாட்டிற்கு இல்லை.

சிங்களப் பேரினவாதத்தால் இங்கொரு தமிழின சங்காரமே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பல்லாயிரம் தமிழர்கள் சிங்களப் படைகளினால் கொல்லப்பட்டுவிட்டனர். தமது சொந்த இடங்களிலிருந்தே அகதிகளாக விரட்டப்பட்டுவிட்டனர். சொந்த மண்ணிலேயே சிறை வைக்கப்பட்டிருப்பதுபோல அடைத்துவைக்கப் பட்டிருக்கின்றனர்.

ஈழத்தமிழினம் தன்னைப் பாதுகாப்பதற்காக ஆயுதமேந்திப் போராட வேண்டிய வரலாற்றுத் தேவையும் அவசியமும் இங்கிருக்கிறது. இல்லாவிடின் ஈழத் தமிழ் இனமே அழிந்துபட்டுவிடும். ஈழத்தமிழினம் எதிர்நோக்கியுள்ள இந்த அபாயத்தை உணராத இந்திய அரசு எமது மக்களை அழித்தொழிப்பதற்குச் சிங்கள அரசுக்குத் துணைபோவது, தமிழின அழிவுக்கு வழி வகுக்கும்.

தனித்துவமான வரலாற்று நிர்ப்பந்தங்களால் தமிழீழத்தில் தோன்றியுள்ள சுதந்திரப் போராட்டத்தையும் அதன் நியாயப்பாடுகளையும் புரிந்து கொள்வதை விடுத்து, எமது விடுதலைப் போராட்டத்தை இந்திய அரசு தனது உள்நாட்டுப் பிரிவினைவாதங்களுடன் ஒப்புவதும் அதனால் தனது தேசிய நலனுக்கு ஆபத்து ஏற்படும் எனக்கருதுவதும் மிகவும் தவறான, குருட்டுத்தனமான பார்வையாகும்.

இந்தத்தவறான கண்ணோட்டத்தின் காரணமாகவே இந்திய ஆட்சிபீடம் அநியாயமான முறையில் எமது விடுதலைப் போராட்டத்தில் குறுக்கிடுகின்றது.

மாறிவரும் இப்புதிய உலகில் தேசிய சுதந்திரம் பெற்றுள்ள எத்தனையோ புதிய நாடுகளை அங்கீகரித்துள்ள இந்திய அரசு எமது விடுதலைப் போராட்டம் சம்பந்தமாகவும் தனது விடாப்பிடியான நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும்.

தமிழீழ அரசு அமைவது இந்திய தேசிய நலனுக்கோ அல்லது அதன் பிரதேச -பூகோள நலனுக்கோ எந்த வித அச்சுறுத்தலாகவும் அமையாது என இந்திய அரசு புரிந்து கொள்ள வேண்டும். இதன் அடிப்படையில் தமிழீழம் தொடர்பான தனது வெளியுறவுக் கொள்கையை இந்திய அரசு மாற்றியமைத்து தமிழீழ மக்களின் நியாயபூர்வமான சுதந்திரப் போராட்டத்திற்கு இந்திய அரசு ஆதரவளிக்க முன்வரவேண்டும். ■

## இந்திய அரசின் "பொய்ப் பிரச்சாரம்" அம்பலமாகியது.

பம்பாய் நகரில் 250 க்கு மேற்பட்டவர்களின் மரணத்திற்கும் ஆயிரக்கணக்கானவர்களின் உடற்காயங்களுக்கும் காரணமான குண்டுவெடிப்புகளுடன் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தொடர்புபடுத்த இந்திய அரசு எடுத்த முயற்சி தோல்வியடைந்துள்ளது. இக்குண்டுத் தாக்குதல்களை தாமே மேற்கொண்டதாக சீக்கிய தீவிரவாத இயக்கமான காலிஸ்தான் கொமாண்டோ படைப்பிரிவு உரிமை கோரியுள்ளது. இதனால் இந்திய அரசின் பொய்ப்பிரச்சாரம் உலகின்முன் அம்பலமாகியுள்ளது. இதற்கிடை பின்வரும் தலைப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வமான ஏடான "விடுதலைப் புலிகள்" ஆசிரிய தலையங்கம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

## பிரேமா.....

மூலம் தமிழ் மக்களுக்கும் புலிகளுக்கும் இடையே ஒருவகையான விரிசலை ஏற்படுத்தலாம் என சிறீலங்கா அரசு பகற்கனவு கண்டது. இவ்விதம் சிந்தனைக் குழப்பத்தை தோற்றுவித்துவிட்டு பாரிய படையெடுப்பை வடக்கு கிழக்குக்கு மேல் நகர்த்துவது மூலம் இராணுவ வெற்றியைப் பெறலாம் என்பதே பிரேமதாசாவின் உள்நோக்கு.

"சிங்களப் பேரினவாதம்தான் புலிகள் இயக்கத்தை வளர்க்கின்றது. அவர்களது ஆயுதப் போராட்டத்தை நியாயப்படுத்துகின்றது. தொடர்ந்தும் பேரினவாத சகதிக்குள் நின்றால் நிச்சயம் நாடு பிளவுபடும், புலிகள் தனியரசமைப்பர். அல்லது ஐ.-நா. தலையிட்டு சைப்பிரஸ் பாணியில் ஒரு தீர்வைக் கொடுத்துவிடும். ஆகவே தமிழர்களுக்கு எதுவுமே கொடுக்கக் கூடாதென்ற பேரினவாதக் கொள்கையைக் கைவிட்டு ஒரளவு நியாயமான தீர்வுத் திட்டத்தைச் சிங்கள தேசம் முன்வைக்க வேண்டும். அதுதான் தமிழ் மக்களை தனிநாடமைப்பதிலிருந்து தடுக்கும். வடக்கு கிழக்கு இணைப்பைச் சிங்களக் கட்சிகள் எதிர்க்கலாம். ஆனால் தனித் தனிமாகாண சமஸ்டியை ஏற்றுக் கொள்ள வேண்டும்" என சிங்கள இனத்திற்கு புத்திமதி கூறி சிறீலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் நிழல் ஆலோசகரும் முன்னாள் கொம்யூனிஸ்ட்டும் ஆகிய தயான் ஜெயதிலக (அனுருத்த திலகசிறீ என்ற புனை பெயரில்) "சண்டே ஒப்சேவர்" இல் எழுதினார். இவ்வசனங்கள் தெரிவுக்குழுவின் அரசியல் நோக்கை தெளிவாக்கப்போதுமானவை. அத்துடன் சமஸ்டி என்ற சொல்லைக் கண்டு மிரளத் தேவையில்லை. இதுவெறும் மினுக்குப் பூச்சுத்தான், பெயர் சூட்டல் தான். உளவியல் ரீதியாக தமிழர்களை மயக்கத்தில் ஆழ்த்தப் பயன்படுத்தப்படும் அர்த்தமற்ற சாதாரண அரசியற்பதம்தான். எனவே சிங்கள இனம் அஞ்சத் தேவையில்லை. சமஸ்டிச் சட்டை போட்ட இத்தீர்வுத் திட்டம் புலிகளின் எதிர்ப்பையும் மீறி வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டால் வடக்கு -கிழக்கு என்று தமிழர்களின் பூர்வீகத் தாயகம் துண்டாடப்படும். இதன் விளைவாக கிழக்கு சிங்களமயமாகும். தமிழர்களின் தாயக கோட்பாடும் தேசிய பலமும் சிதைக்கப்படும். இதேவேளை யாழ் குடா நாட்டின் மீது ஒரு பாரிய படையெடுப்பை நடாத்தி புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட வேண்டும். புலிகள் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்படுவதன் மூலம் சிங்களப் பேரினவாதத்திற்குச் சவால் விட்டபடியிருக்கும் தமிழீழத் தேசியத்தின் பாதுகாப்பு உடைந்து நொருங்கும். இதன் பின்பு சிங்கள பேரினவாதம் தமிழ்த் தேசியத்தைக் கொல்லும். தமிழீழ விடுதலைப் போராட்டம் வேரடி மண்ணுடன் பிடுங்கி வீசப்படும். இலங்கைத் தீவு சிங்கள இனத்திற்கு ஏகபோகமாகிவிடும். இதுதான் பிரேமதாசா அரசின் பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலம் காணத் துடிக்கும் தீர்வென்னும் நாசகாரத்திட்டம். ஆயினும் சிங்கள அரசின் போக்கை தமிழீழ மக்கள் நன்கறிவர். ஒரு நிரந்தர பாதுகாப்பு, ஒரு நிம்மதியான கௌரவமான வாழ்வு, இதுவே மக்களின் தேவை என்பதை அவர்கள் அறிவர். இதை அடைவதற்காக உழைப்பதில் தமிழீழ மக்களை யாராலும் தடுக்க முடியாது. இதுவரை காலமும் செய்த முயற்சிகளும் புரிந்த தியாகங்களும் சந்தித்த இழப்புக்களும் அர்த்தமற்றுப் போகக் கூடாது என்ற தேசிய உணர்வுடனேயே தமிழீழ மக்கள் 'தெரிவுக்குழு'வின் யோசனைகளை நிராகரித்துள்ளனர். சிங்களவர்களுக்காக சிங்கள அரசால் நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு சிங்கள பௌத்த பேரினவாத எல்லைக்கு வெளியே வரமுடியாது என்பதும் யதார்த்தமான உண்மையே! ■

## எமது பொருளா...

500 ஆண்டுகளுக்கு மேல் அந்நியரால் எமது இனம் ஆளப்படும் இனமாக இருந்து வந்ததால், ஆளப்படும் ஓர் இனம் என்ற உணர்வுடனேயே எமது மாணவர்கள் எமது வரலாற்றைப் படிக்கின்றார்கள். எமது வரலாற்றைப் படிக்கின்றார்கள். எனவே எமது வரலாறு சரியான முறையில் தெரியப்படுத்தப்படல் அவசியம் என்றார்.

### கல்விப்பணிப்பாளர்

யாழ். பிரதேசக் கல்விப்பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது:

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் அற்புதமான செயற்பாடுகள், சோர்வுற்ற கல்வி செயற்பாடுகளுக்குத் துணைபுரிந்து வருகின்றன.

எமது மாவட்டத்தின் ஆசிரியர் பற்றாக்குறையை போக்க 600 தரமான ஆசிரியர்களை அவர்கள் தந்துள்ளனர். மிகக்குறுகிய காலத்தில் மாணவர்கள் உடல், உள வளர்ச்சிக்கு அவசியமான விளையாட்டுத் துறையை மேம்படுத்தி மாணவர் உலகத்தை ஊக்குவித்துள்ளனர்.

பரீட்சைகள் தடைப்படுவதால் மனம் குன்றிய மாணவர்களின் நிலைமையை சிந்தித்து முன்னோடிப் பரீட்சையை நடத்தி முடித்துள்ளனர்.

'போராட ஓர் இனம், சுகபோகங்களை அனுபவிக்க ஓர் இனம் என்ற நிலை இன்றி இடைவெளியை கல்வியால் இணைத்து செயற்படுவோம்.

இன்றைய நிகழ்ச்சிக்கு எமது தேசியத் தலைவர் அனுப்பிய செய்தி எமக்கு உற்சாகத்தையும், மனப்பூரிப்பையும் ஏற்படுத்தியுள்ளன -என்றார். ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 25 தமிழ் இளைஞர்கள் பலாலி முகாமில் கொலை

## ■ விடுவிக்கப்பட்டவர் தகவல்

பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் நாங்கள் பலமாக தாக்கப்பட்டோம். அந்த ஒரு வருட காலமும் பலாலி முகாம் எமக்கு சித்திரவதை கூடமாகவே இருந்தது. எமது கண்முன்னால் பல தமிழ் இளைஞர்கள் அடித்தும், சுட்டும் கொல்லப்பட்டது மட்டுமல்லாமல் அவர்கள் உடல் மீது மின்சாரமும் பாய்ச்சப்பட்டது.

இவ்வாறு பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில் இரண்டு வருடங்கள் தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த கதிரவேலு தவேந்திரன் (வயது 23) தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும்போது நானும், என்னுடன் ஏழு பேர் இந்தியாவை நோக்கிச் சென்று கொண்டிருந்த வேளையில் பருத்தித்துறை கடற்பகுதியில் கடற்படையினரால் 25-02-1991 இல் கைது செய்யப்பட்டோம். ஏழு பேரும் கடற்படையினரால் காரைநகர் கடற்படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர் பலாலி முகாமுக்கு கொண்ட செல்லப்பட்டோம். என்னுடன் கைது செய்யப்பட்டவர்களில் மூவர் களுத்துறை முகாமுக்கு அனுப்பப்பட்டனர். ஒருவர் தப்பி ஓடி விட்டார். மிகுதியான இருவர் இன்னமும் பலாலி முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்ட முதல் வருட காலப்பகுதியில் சீரான உணவு வகைகள், உறக்கம் இல்லாமல் பல கஸ்டங்களுக்கு உள்ளானோம். இதேவேளையில் விடுதலைப்புலிகள் இராணுவ முகாம்களைத் தாக்கி இராணுவத்தினருக்கு பலத்த இழப்புகள் ஏற்படும்போது இராணுவத்தினரால் நாங்கள் பலமாகத் தாக்கப்பட்டோம்.

27-02-1992 இல் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் எம்மைப் பொறுப்பேற்ற பின்னர் எமக்கு ஓரளவு ஆறுதல் கிடைத்தது. பலாலி இராணுவ முகாமில் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் படு கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர். இராணுவத்தினரின் கையில் சிக்குண்ட நாம் மீண்டும் வருவோம் என நினைத்துக் கூட பார்க்கவில்லை.

நாங்கள் விடுதலையாகி வரும் போது,

"நீங்கள் விடுதலை பெற்றுச் சென்று விடுதலைப்புலிகளுடன் இணைந்து எமக்கு எதிராகத் துப்பாக்கி ஏந்துவீர்கள். உங்களை நம்ப முடியாது" என இராணுவத்தினர் எம்மைப் பார்த்துக் கூறினர்.

நாங்கள் விடுதலையாகி வரும் போது ஈ. பி. டி. பியை சேர்ந்த டக்ளஸ் தேவானந்தா எம்மைச் சந்திக்க விரும்புவதாக இராணுவம் தெரிவித்தது. நாம் மறுத்து விட்டோம். இராணுவம் எம்மை வற்புறுத்தவில்லை என்றார்.

ரவீந்திரன் என்பவர் கூறுகையில்:

பலாலியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரில் 17 பேரும் பெலவத்தையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோருமாகச் சேர்த்து 40 பேரை விடுதலை செய்ய இருப்பதாக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளதாகப் புலிகளின் குரல் வானொலி அறிவித்ததை தாங்கள் கேட்டதாகவும், அன்றுமுதல் தானும் விடுதலை செய்யப்படுவேனா என்ற எதிர்பார்ப்புத் தனக்கு ஏற்பட்டதாகவும் தெரிவித்தார். ■

# பலாலி படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தோர் விடுதலை

சிறிலங்கா கடற்படையினரால் கடலில் வைத்து கைது செய்யப்பட்டு பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தோரில் 20 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் மூவர் தேடுதல் சேவையின் மூலமே விடுவிக்கப்பட்டனர். இம்மூவரும் மீனவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பலாலி இராணுவ முகாமிற்குச் சென்றிருந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை பிரதிநிதிகள் இவர்களைப் பொறுப்பேற்று அழைத்து வந்து சங்க காரியாலயம் முன் உறவினர்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

விடுதலை செய்யப்பட்ட 20 பேரினது விபரங்களும் வருமாறு:

வரதராஜா மகேந்திரராஜா (குருநகர்), ரமணானந்தசாமி தேவதாஸ், சரிப்குசேஸ் (மன்னார்), நவரட்ணம் ஞானரட்ணம், துரைசாமி சந்திரலிங்கம், அருளானந்தசாமி ராமகிருஸ்ணன், சிவசாமி சோதிநாதன் (ஆத்திமோட்டை மன்னார்), கதிரவேலு தவேந்திரன், தங்கராசா ஜெயக்குமார் (சுன்னாகம்), தேவசகாயம் அருள்நேசநாயகம், செல்வமாணிக்கம் அப்புத்துரை, ஐயாசாமி செல்லத்துரை, சுப்பிரமணியம் குலேந்திரன், கதிரவேலு யோகேஸ்வரன், துரைச்சாமி புஸ்பராசா, கயித்தாம்பிள்ளை தைசப்பிள்ளை (45) மாதகல், ஞானம் ரவீந்திரன் (28) நாச்சிக்குடா, நெப்போலியன் சேசிய பர்ணாண்டோ (47) மாதகல், குயினஸ் (23) தெல்லிப்பழை.

விடுவிக்கப்பட்டோரில் ஜெயக்குமார், செரிப்குசேல் ஆகிய இருவரும் சொந்த விருப்பின் பேரில் விமானம் மூலம் கொழும்பு கொண்டு செல்லப்பட்டு அங்கு வைத்து விடுதலை செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. ■

# இந்த மண்ணின் படைப்புக்களை வெறுக்கும் மனநிலை மாறட்டும்

## ■ உள்ளூராட்சி உதவி ஆணையாளர்

"ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் முதன் முதலில் திருகோணமலைக்கு விஜயத்தை மேற்கொண்டு வந்தார். அப்போது நான் அங்கு வேலை செய்து கொண்டிருந்தேன்.

இன ரீதியாக கச்சேரி உத்தியோகத்தர்களின் விகிதாசாரத்தைக் கேட்டறிந்தார். ஆறே மாதங்களில் 80 சதவீதமாக இருந்த தமிழ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தலைகீழாக மாறியது."

இவ்வாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா தெரிவித்தார்.

நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற யோசப் பாலாவின் சிறுகதைத் தொகுதி "தரிசனம்" வெளியீட்டுரையை நிகழ்த்துகையில் அவர் இவ்வி தம் கூறினார். திரு. செம்பியன் செல்வன் தலைமையில் இவ் விழா நடைபெற்றது.

திரு. சு. டிவகலாலா தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது;

"அதே ஜெ. ஆர். ஜெயவர்த்தனா இந்நாட்டில் தமிழ் மொழிக்கு சம அந்தஸ்த்து வழங்கினால் தமிழ் மொழி, சிங்கள மொழியை விழுங்கிவிடும் என்று தெரிவித்தார். இந்த மண்ணிலிருந்து இலட்சக்கணக்கான பணம் பிற நாட்டு நூல்களைக் கொள்வனவு செய்ய செலவழிக்கப்படுகின்றது. இந்த மண்ணின் மக்கள், இந்த மண்ணின் படைப்புக்களை வெறுக்கும் நிலை மாறவேண்டும்." இவ்வாறு அவர் தெரிவித்தார்.

வண. எஸ். எச். ஜெபநேசன் அடிகள், கவிஞர் யாழ் ஜெயம் ஆகியோர் ஆசியுரையும், வாழ்த்துப் பாவும் வழங்கினர். திருமதி பி. எவ். சின்னத்துரை, திரு. என். சண்முகலிங்கம் ஆகியோர் கருத்துரை நிகழ்த்தினர்.

நூலாசிரியரின் பதிலுரையை அடுத்து அமுதமொழியன் நன்றி கூறினார். ■

# ஏழு மாதங்களில் 905 குழந்தைகள் நோயால் பலி!

யுத்த நிலைமை காரணமாக, வட மாகாணத்தில் இராணுவக் கட்டுப்பாடு இல்லாத பகுதிகளில் மட்டும் 905 குழந்தைகள் வயிற்றோட்டம், மலேரியா நோய் காரணமாக இறந்துள்ளதாக தெரிய வருகின்றது.

கடந்த வருடம் மே மாதம் முதல் நவம்பர் மாதம் வரையுள்ள 7 மாத காலத்தில் இந்த மரணங்கள் சம்பவித்துள்ளன.

இறந்தோரில் பெரும்பாலானோர் 12 வயதுக்கு உட்பட்டவர்களே என்றும் தெரிய வந்துள்ளது.

போதிய மருத்துவ வசதிகள் இல்லாததே இதற்குக் காரணமாகும்.

யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டுள்ள புள்ளி விபரங்களின்படி மேலும் தெரிய வருவதாவது:

"இராணுவக் கட்டுப்பாடில்லாத பகுதிகளில் உள்ள ஆஸ்பத்திரிகளில் இந்த 7 மாத காலத்தில் 14, 416 பேர் வயிற்றோட்ட, மலேரியா நோய் கண்டு அனுமதிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் அனைவரும் சிறுபராயத்தினரே!

யாழ்ப்பாணத்தில் மட்டும் 6080 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 306 பேர் நோயைக் கட்டுப்படுத்த முடியாததினால் மரணத்தை தழுவிக் கொண்டனர்.

தொடர்ச்சி 4ம் பக்கம் ....

## வலி- வடக்கு மேற்குப் பகுதியில்

# இராணுவ ஆக்கிரமிப்பின் பின் மரணமான 24 பேர் விபரம்

கடந்த ஆண்டு (1992) ஆகஸ்ட் 20 ம் திகதி சிறிலங்கா இராணுவத்தினர் அளவெட்டி, மாதகல், இளவாலை, பண்டத்தரிப்பு பகுதிகளை ஆக்கிரமித்த பின்பு நோய் வாய்ப்பட்டும், தகுந்த சுகாதார -உணவு வசதி இன்றியும் மரணித்துள்ள 24 பேர்களின் விபரங்கள் வருமாறு:-

மாதகல் பகுதியில் இறந்த 9 பேர்கள்:

முருகர் வள்ளியம்மை (90), வீரகத்தி விநாயகராஜா (76), வேலுப்பிள்ளை செல்லமுத்து (80), வேலுப்பிள்ளை சின்னத்தங்கம் (80), யோசெப் பிலோசம்மா (75), வைத்தியலிங்கம் கந்தையா (85), சுவாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை (85), மயில்வாகனம் மகேஸ்வரி (65), மாட்டின் யோசப் (75).

சித்தன்கேணிப் பகுதியைச் சேர்ந்த ஒருவர்:

கந்தையா சண்முகநாதன் (80)

இளவாலைப் பகுதியில் இறந்த 8 பேர்கள் விபரம்;

கே. செல்வராஜா (60), ரி. தயாளம்மா (72), வி. கந்தையா (82), எஸ். நடராஜா (76), கே. வெற்றிவேலு (81), கே. சின்னதம்பி (80), கே. அப்புத்துரை (82), எ. - மீனாட்சி (80).

பன்னாலைப் பகுதியில் இறந்த நால்வரின் விபரம்:

கந்தைப்பிள்ளை தங்கம்மா (68), நல்லப்பு சின்னத்தங்கம் (82), கந்தப்பிள்ளை இளையபிள்ளை (92), முத்துக்குமாரு சின்னத்தங்கம் (70).

கீரிமலைப் பகுதியில் சூட்டுக்கு இலக்காகிப் பலியான ஒருவர்:

சுந்தரம் சிவகுரு (55)

தெல்லிப்பளைப் பகுதியில் 60 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் மரணித்துள்ளார். பெயர் விபரம் கிடைக்கவில்லை. ■




# கூட்டுறவுச் சபை

## மகளிர் குழுவின் மகளிர் தினம்

யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபையின் மாவட்ட மகளிர் குழுவால் ஒழுங்கு செய்யப்பட்ட சர்வதேச மகளிர் தின விழா யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது. இதனையொட்டி, பேச்சுப்போட்டி என்பன நடாத்தப்பட்டன. யாழ் மாநகர கூட்டுறவுச் சபையில் அங்கத்தவர்களுக்கிடையிலும் உள்ளூர் உணவு உற்பத்தி போட்டி, மற்றும் கட்டுரை பேச்சுப்போட்டிகள் என்பன நடாத்தப்பட்டன. இவற்றில் வெற்றி பெற்றோருக்கு குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டன. ■


வெளிவந்துவிட்டது!

ஒலியிழை நாடா




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வந்ததே வாழ்வு
வீடிழந்து நடு வீதியினோரம்
நாலு சட்டமின்
மொய்திடும்
நாற்பது கண்கள் !






| | | | | |
|---|---|---|---|---|
| TAMIL CO-ORDINATING COMMITTEE<br>P.O.BOX 694, MULGRAVE NORTH<br>VICTORIA 3170, AUSTRALIA.<br>Tel: 03-457 6347 Fax: 03-561 8224 | LIBERATION TIGERS OF TAMIL EELAM<br>P.O.BOX 47, 7600 STRUER<br>DENMARK.<br>Tel / Fax: 97-841231 | TAMIL CO-ORDINATING COMMITTEE<br>341 Rue des Pyrenees<br>75020 paris, france.<br>Tel: 435 81142 Fax: 435 81191 | TAMIL CONFEDERATION-GERMANY<br>P.O.BOX 340251<br>5270 GUMMERSBACH 34<br>GERMANY. | TAMIL CO-ORDINATING COMMITTEE<br>Via Mariano Stabile - 34<br>90139 PALERMO, ITALY.<br>Tel / Fax: 091-611 3179 |
| TAMIL CO-ORDINATING COMMITTEE<br>Groot Hertoginnelaan 106<br>2517 BL Den Haag, NEDERLAND<br>Tel:070-346 1963 Fax:070-346 1970 | TAMIL CO-ORDINATING COMMITTEE<br>P.O.Box 1699 Vika<br>0110 OSLO - 1, NORWAY.<br>Tel: 02-191260 Fax: 02-190114 | TAMIL CO-ORDINATING COMMITTEE<br>HOFJECKLIN, 7415 RODELS<br>SWITZERLAND.<br>Tel: 077-816609 | UNITED TAMILS ORGANISATION<br>54 TAVISTOCK PLACE<br>LONDON WC1H 9RG, U.K.<br>Tel: 071-837 7162 Fax: 071-278 5666 | |


Printed by DBOS LTD

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்